# குமரமலை

# தலவரலாறு - பாமாலை



வெளியீடு :

தெய்வீகப் பேரவை

புதுக்கோட்டை - 622 001.

15—5—1984

உ

மயிலேறி விளையாடு குகனே புல்வயல்நீடு
மலைமேவு குமரேசனே — குமரேச சதகம்.

# குமரமலை
# தலவரலாறு - பாமாலை


ஆசிரியர்:

**கவிஞர் சா. சீனிவாசன்,**

*தலைமை மேலாளர் (ஊராட்சி வளர்ச்சி),*

*மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம்,*

**புதுக்கோட்டை - 622 005.**



வெளியீடு:

## தெய்வீகப் பேரவை

புதுக்கோட்டை – 622 001.

(அரசு அலுவலர்கள் அமைப்பு)

திருவள்ளுவர் ஆண்டு 2015-

ரக்தாக்ஷி — வைகாசித் திங்கள்

இரண்டாம் நாள்

**15 - 5 - 1984.**

முதற் பதிப்பு : 1 - 1 - 1984

இரண்டாம் பதிப்பு : 15 - 5 - 1984

இலவச வெளியீடு

அச்சிட்டோர் :

மதராஸ் ரிப்பன் பிரஸ்,

புதுக்கோட்டை - 622 001.

தொலைபேசி எண் : 2211.

# பதிப்புரை

திருப்புல் வயலில் வாழ்ந்த குருபாத தாசரால் இயற்றப்பட்ட 'குமரேச சதகம்' என்ற பாடல் பெற்ற சிறப்புடைய திருத்தலம் குமரமலை. அங்கு எழுந்தருளியுள்ள அருள்மிகு குமரேசன், வேண்டிவரும் அடியவர்க்கு வேண்டிய வரமருளும் கருணைக் கடலாக இருப்பதால், அவனது புகழும் பெருமையும் இப்பகுதி வாழ் மக்களால் பெரிதும் போற்றப்பட்டு வருகின்றது. ஆயிரக் கணக்கான மக்கள் வந்து வழிபட்டு மகிழும் நிலையில் இத்திருத்தலம் பெரிதும் வளர்ந்தோங்கி வருகின்றது.

இந்நிலையில் இத்தலத்தின் அருமை பெருமைகளையும், வரலாற்றுச் சிறப்புகளையும் மக்கள் அறிந்து கொள்ள ஏற்றதொரு நூல் உடனடித் தேவை என்பதை உணர்ந்து, இம் மாவட்டத்தில் ஆட்சியாளராக இருந்த திரு. எஸ். டி. காசிராஜன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, முன்னாள் பொன்னமராவதி வட்டார ஊளர்ச்சி அலுவலரும், தற்போது புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் ஊரக வளர்ச்சிப் பிரிவின் தலைமை மேலாளராகப் பணியாற்றி வருபவருமான கவிஞர் சா. சீனிவாசன் அவர்கள், ''குமரமலை வரலாறு - பாமாலை'' என்னும் இந்நூலை எளிய இனிய நல்ல நடையில் அழகுற, எழுதியளித்திருக்கின்றார். 1-1-1984 அன்று தெய்வீகப் பேரவையினரால் வெளியிடப்பட்ட இந்நூலின் முதற் பதிப்பைக் கண்ணுற்ற, மற்றும் நாளேடுகளில் வெளியான நூல் மதிப்புரையைக் கண்ணுற்ற, முருக பக்தர்களும், பேரவையினரும் இந்நூலை அனுப்ப வேண்டி எண்ணற்ற கடிதங்கள் அனுப்பியுள்ள அவர்களின் ஆவலை நிறைவு செய்ய தற்போது இரண்டாவது பதிப்பு வெளியிடப்படுகிறதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை எழுதி உதவிய கவிஞர் திரு. சா. சீனிவாசன் அவர்களுக்கும், இந்நூல் தோன்ற காரணமாக இருந்ததுடன், இந்நூலுக்கு சிறந்ததொரு அணிந்துரையை நல்கி, 1-1-1984 ஆம் நாளன்று தெய்வீகப் பேரவையினரால் நடத்தப்பட்ட மூன்றாவது ஆண்டு குமரமலைப் படித் திருவிழாவில் கலந்து கொண்டு இந்நூலின் முதற்பதிப்பை வெளியிட்டு மகிழ்ந்த பெருமதிப்பிற்குரிய பெருந்தகையாகிய சென்னை போக்குவரத்து ஆணையர் மற்றும் பச்சையப்பன் அறக்கட்டளைத் தலைவருமான திரு எஸ். டி. காசிராஜன், ஐ. ஏ. எஸ்., அவர்களுக்கும், விழாவில் தலைமையேற்று மகிழ்ந்த பெருமதிப்பிற்குரிய பெருந்தகையாகிய புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இரா. கற்பூரசுந்தர பாண்டியன், ஐ. ஏ. எஸ்., அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கி மகிழ்ந்த புதுக்கோட்டை திலகவதியார் திருவருள் ஆதீனம் தவத்திரு, சாயிமாதா அன்னைக்கும், நன்கொடை நல்கி இந்நூலின் இரண்டாவது பதிப்பை அச்சிட்டு வழங்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள புதுக்கோட்டை-காமராஜபுரம் திரு. பி. வி. அனுமந்தராவ் அவர்களுக்கும் இதற்கான தாள்களை வழங்கி உதவிய புதுக்கோட்டை நிஜாம் பேப்பர் & போர்டு மில்ஸ் மேலாண்மை இயக்குநர் திரு ஏ ஆர். நூர்முகமது அவர்களுக்கும் 15-5-84ம் நாளன்று வைகாசி விசாகப் பெரு விழாவில் இந்நூலை வெளியிட்டு மகிழ்கின்ற புதுக்கோட்டை சுழற்கழகத் தலைவர் திரு. எஸ். ஆண்டியப்பன், பி. பி. ஏ., அவர்களுக்கும் விழாத் தலைமை ஏற்று மகிழ்கின்ற புதுக்கோட்டை கம்பன் கழகத் தலைவர் திரு. மா. கந்தையா அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்குகின்ற அறிஞர் பெரு மக்களுக்கும் இந்நூலை நன்முறையில் குறித்த நேரத்தில் அச்சிட்டு உதவிய புதுக்கோட்டை மதராஸ் ரிப்பன் அச்சகத் தினருக்கும் அதன் மேலாளர் திரு. வீர. காசிவிஸ்வநாதன் அவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியையும், வணக்கங் களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை அச்சிட்டு வழங்கும் பொறுப்பும் சிறப்பும் பேறும் பெற்றமைக்காக, எல்லாம் வல்ல குமரமலை குமரேசன் திருவருளை அன்புடன் பணிந்து மகிழ்கின்றேன். குமரமலை தண்டபாணியின் மெய்யன்பர்கள் அனைவரும் இந்நூலைப் படித்துப் பயன் பெற வேண்டுகிறேன்.

புதுக்கோட்டை
9—12—1983

**ம. மகாலிங்கம்,**
*தனி வட்டாட்சியர் மற்றும்*
*தலைவர், தெய்வீகப் பேரவைக்குழு.*

சென்னை போக்குவரத்து ஆணையர்
மற்றும் தலைவர், பச்சையப்பன் அறக்கட்டளை

# திரு. எஸ். டி. காசிராஜன், ஐ. ஏ. எஸ்.,

அவர்கள் அளித்த

## அணிந்துரை :

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பக்திச் சுவைசொட்டும் பனுவல்களுக்குத் தனிச்சிறப்பு உண்டு. கற்போர் நெஞ்சை அள்ளும் திறத்துடன் செந்தமிழ் மணக்கும் தீந்தமிழ் பாக்களாய் அமைந்துவிட்டன. பக்தித் துறையில் உலகின் ஒப்புயர் வற்ற இலக்கியப் பெட்டகங்களைப் படைத்த மொழி நந்தம் தமிழ்; பழமையிற் பழமையும் புதுமையிற் புதுமையும் மாறா இளமையும் கடவுட்பண்பாக மனித இனம்கருதி வந்துள்ளது.

'முன்னைப் பழம் பொருட்கும்
முன்னைப் பழம் பொருளே !
பின்னைப் புதுமைக்கும்
பேர்த்தும் அப் பெற்றியனே''

என்றார் மாணிக்கவாசகப் பெருமான்.

தண்டமிழகத்தில் சைவரின் வேதமாகத் தேவார திருவாசகங்களும் வைணவரின் வேதமாகத் திருநாலாயிரபிரபந்தமும் விளங்குகின்றன. தமிழில் எல்லாச் சமய இலக்கியங்களும் செழித்துவளர்ந்து, அவ்வச் சமய நெறிகளுக்குத் தூய்மையும் உயர்வும் அளித்துள்ளன. ஆழ்வார்களும் நாயன்மார்களும் வைணவ, சைவ நெறிகளைப் பரப்பிடுவதற்குத் தித்திக்கும் தேன்தமிழ்ப் பாசுரங்களில் ஒப்பிலாமணியாகிய இறைவனின் மாண்புகளை, ஆளுடைமைத் தன்மைகளை, பாடிப் பரவசமடைந்துள்ளனர், தமிழும் தழைத்தது; தன்னிகர் இல்லா இறைவன் புகழும் பரவியது; மக்கள் பக்தி வெள்ளத்தில் திளைத்தனர்.

தமிழகத்தில் ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்னரே நூற்றுக்கணக்கான திருக்கோயில்கள் இருந்தன. வானளாவி ஓங்கி நிற்கும் அற்புதச் சிற்பங்களைக் கொண்ட மாபெரும் கோயில்கள், தமிழகத்தின் இறைமைப் பண்பை இன்றும் விளக்கி நிற்கின்றன. சைவ, வைணவத் தலங்கள் கால வெள்ளத்தில் அழியாது, வழிபாட்டு நிலையங்களாக இன்றும் நிலைபெற்றுள்ளன.

'குறிஞ்சிக் கிழவன்' முருகப் பெருமானின் திருத்தலங்களும் கோயில்களும் தமிழகத்தில் எத்தனையோ உள்ளன. பண்டுதொட்டு இன்றுவரை மங்காப் புகழின் சின்னமாக முருகனின் மாட்சிமையை ஆட்சி செய்யும் திருத்தலங்களாகத் திகழ்கின்றன. திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரர் காலத்திலிருந்தே முருகனின் ஆறுபடை வீடுகளின் பெருமை நிலைத்துவிட்டது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் பாடல்களில் முருகனின் திருந்தலங்கள் பலபெரிதும் போற்றப் பட்டுள்ளன.

குறிஞ்சித் திணைக்குரிய கடவுளாகப் பண்டைநாள் தொட்டு வணங்கப்படும் முருகனின் சிறப்பையும் எழிலையும் குறுந்தொகை செப்புகின்றது. தாமரை மலரைப்போன்ற அழகுமிளிரும் செம்மையாகிய திருவடியினையும், பவழத்தையொத்த சிவந்த நிறத்தையும், குன்றிமணியையொக்கும் சிவந்த ஆடையினையும் உடைய முருகனின் புகழைப்பலபடி பாடிடும் பெற்றிபெற்றது குறுந்தொகை.

வழிவழியாகத் தமிழகத்தில் முருகப்பெருமானின் பெற்றியைப் போற்றி வந்துள்ளனர் தமிழர்கள். என்றுமுள செந்தமிழ்போல், என்றும் அழியாத புகழையும் இறைமைப் பண்பையும் நமது புலவர்கள் முருகனின் மீது ஏற்றி ஏற்றம் கண்டுள்ளனர். இந்த மரபில் இன்று நம்மிடை குமரமலையின் சிறப்பைப் பாடி, நம்மைப் பக்திவெள்ளத்தில் பரவசப்படுத்துகின்றார், புதுக்கோட்டை மாவட்டத்தின் ஆட்சியாளர் அலுவலகத்தில் ஊராட்சி வளர்ச்சிப்பிரிவில் தலைமை மேலாள

ராகப் பணியாற்றும் திரு சா. சீனிவாசன் அவர்கள். நான் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தபோது குமரமலைக்குச் சென்ற சமயம் அவரின் திறம் அறிந்து குமரனின் புகழைப் பாடுங்கள் என்றேன். இவர், இத்தகைய சீர்மிக்க செந்தமிழ்ப் பனுவலை குமரமலையில் குடி கொண்டுள்ள அருள்மிகு தண்டபாணி திருக்கோயில் குறித்து யாத்துப் பெருமை பெற்றுள்ளார். இவருக்கு முன்பு இத் திருத்தலம் பற்றப் பாடிய பீடுடைய குமரேச சதகத்தில்,

''மயிலேறி விளையாடு குகனே புல்வயல் நீடு
மலைமேவு குமரேசனே'' என்று

தெளிவாக்கப்பட்டுள்ளது. அத்தகையபாடல் பெற்று குமரேச னின் அருளையும், குடிகொண்டுள்ள திருக்கோயில் வரலாற் றையும் என்றும் நிலை பெற்றிடும் தன்மையில் செந்தமிழ்ச் சுவை சொட்டச் சொட்ட இந்நூலில் வடித்துத் தந்துள்ளார் ஆசிரியர். வரலாற்றை உரைநடையில் எழுதித் தெரிவித்த துடன் பா மலர்களால் குமரேசனின் திருவருளைப் பலவாறு புனைந்துள்ளார்.

குருந்தொகையில் முருகனின் புகழை உவமைகளால் அழகுறவர்ணிப்பதேபோல், இந்நூலாசிரியரின் பாமாலையில் உவமை நயம் செறிந்துள்ளது. திரு சா. சீனிவாசன் அவர்களின் அரிய படைப்பான இப்பாமாலையைப் போற்றி அணிந்துரை நல்கும் வாய்ப்புப் பெற்றமை குறித்துப்பெரிதும் மகிழ்கின்றேன். அரசுப் பணியில் ஈடுபட்டிருந்தாலும் அழகு தமிழ்ப் பாக்களால் என்றுமுள இளமை குன்றாக்குமரேசனின் புகழை உலகம் உவப்பப் பாடிய அவரின் தொண்டு வாழ்களன வாழ்த்துகின்றேன். இந்நூல் புதுக்கோட்டை மாவட்டத்தின் வரலாற்றில் இடம் பெறுவதுடன், பக்திப்பாடல்கள் வரிசை யிலும் சிறப்புற வேண்டுமென விரும்புகிறேன்.

இந்நூலாசிரியருக்கு முன்னர் பாடிய குருபாத தாசருக்கு உரிய முக்கியத்துவம் அளித்துள்ளர்:

"குருபாததாசர் போற்றும் குமரேசர் வாழுமலை
குறைதீர்க்க வந்தமாந்த குமரமலை எங்கள் மலை"

ஆறுபடை வீடுகளில் ஆட்சி செய்யும் குமரன், குமரமலை நாடியது எற்றுக்கு? இம்மாவட்டத்து மக்கள் வழிபட்டுப் பிணியும் பசியும் நீக்கி நல்வாழ்வு பெறுவதற்காக.

",ஆறுபடை விடமர்ந்தே அருன்பாலித்து
அடியாரின் வினைதீர்க்கும் அய்யனே நீயும்
சிறுபடை வீடெங்கள் குமரமலலவீற்றிருந்து
சிறப்புற ஆட்சி செய்து சிறுமைகள் தீர்க்கவந்தாய்!
வறுமை போக்க வந்தாய்! வளமை
சேர்க்க வந்தாய்"

'குமரமலையில் குடிகொண்டுள்ள தண்டபாணியின் அருட் செல்வமே பெரிது; பொருட் செல்வம் பூரியார் கண்ணுமுள என்பதால் முருகனின் அருட்கருணை வெள்ளம் பெருக்கெடுத் தால், உலகில் எய்தாத செல்வங்கள் எவை?' என்று வினவு கின்றார் ஆசிரியர்.

மழைக் காலத்தில் பொருணை ஆற்றில் பெருக்கெடுத்து ஓடும்வெள்ளமென கந்தன் காத்திடுகின்றான் அடியர்்களை.

"பொருனை நதிவெள்ளம் புரண்டோடி
வந்தாற்போல்
கந்தன் அடியார் கண்கலக்கம் கண்டவுடன்
கணப்பொழுதில் ஓடிவந்து கருத்துடன்
காத்திடுவாய்"

குமரமலைக் குமரேசனின் திறத்தை நயம்பட உரைக்கின்றார் ஆசிரியர்.

குமரமலையைச் சிறப்பித்துக் கூறி இம்மலையே குமரேசனுக்கு உற்றஇடம் என்று உரிமை பாராட்டுகின்றார்.

''குன்று தோராடும் குமரன் என்றாலும்
குமரமலை தான் உனக்கு குன்றமர் படைவீடு''

என்று பெருமை கொள்கின்றார்.

''எதுகைடன் மோனையென இணைந்த
பாட்டாய்
எழில்மேவும் மலைசூழ்ந்த இன்பவூராம்
புதுகையினில் புகழ்சேர்க்கும் குமரமலை
மீதமர்ந்து
புகழ் காக்கவந்தவனே குமரேசா!''

என்று நயம்படக் குறிப்பிட்ட ஆசிரியர் குமரவேலன் எழுந்தருளியுள்ள இடத்தின் மாட்சிமையைப்புலப்படுத்துகின்றார்.

வாடிடும் பூமாலைகளைத் அணிவிப்பதுடன், பக்தி மணம் பரப்பும் அறுபது பா மலர்களைத் தொடுத்து, குமரேசனின் தாளில் பணிந்து அணிவித்துள்ளார். இப்பாமாலையன்றி கந்தபுராணம் கதை பாடி முருகனின் வரலாற்றைச்செந்தமிழ் வரிகளால் செழுமைப்படுத்தியுள்ளார். கந்தனடி தொழுவோர்க்குக் கந்தன் அன்றி வேறு துணை இல்லை என்ற கருத்தை வலியுறுத்திக் குமரேசனின் அருள் தன்மையைப் பலவாறு எடுத்தியம்பியுள்ளார். ஏற்கனவே பாடல் பெற்ற தலமாகத் திகழும் அருள்மிகு தண்டபாணி திருக்கோயில் இன்று திரு சா. சீனிவாசன் அவர்களின் பாடல்களால் புகழ் பெற்று விளங்குகிறது. இந்நூலாசிரியர் திரு சா. சீனிவாசன் அவர்களின் இப்பணி போற்றுதற்குரியது.

அவரின் இத்திருப்பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

சென்னை-600 006,
20—12—1983.

எஸ். டி. காசிராஜன்.

# முன்னுரை

குமரமலையில் குடிகொண்டுள்ள அருள்மிகு தண்டபாணியிடம் உள்ள அளவு கடந்த ஈடுபாடு காரணமாக, குமரமலை தலவரலாற்றை எழுதியதுடன், அன்றே வாடிடும் பூக்களைத் தொடுத்து பூமாலை சூட்டினால் போதாது என நினைந்து, வாடாத பாமாலையை அணிவிக்க விரும்பி, என் உள்ளத்தில் எழுந்த எண்ணங்களைப் பாக்களாகப் புனைந்து, அவன் ஆறுமுகத்தையும் நினைந்து 60 பாக்களைக் கொண்டு பாமாலையைத் தொடுத்து அவன் பாதத்தில் படைத்திருக்கிறேன். கந்த புராணத்தையும் 133 வரிகளில் பாவடிவில் எழுதி அவன் பாதத்தில் படைத்திருக்கிறேன்.

பாமேோ தியகல் வியுமெம் மறிவும்
தாமே பெறவே லவர்தந் ததனாற்
பூமேல் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமேல் நடவீர் நடவி ரினியே'' என்று

அநுபூதி பெற்ற அருட்கவி அருணகிரிநாதர் ''கந்தர் அனுபூதியில்'' பாடியுள்ளது என் நினைவில் பளிச்சிட்டது. நான் கற்ற கல்வி, அதனால் நான் பெற்ற அறிவு, சிந்தனைத் திறன், தமிழ்ப்புலமை, கவிதை எழுதும் ஆற்றல், பாடும் பக்குவம் இவை அனைத்தும் முத்தமிழுக்கும் முதல்வன், முருகன் எனக்குத் தந்த பரிசுகள். அதற்கு என் வாழ்நாள் முழுவதும் நான் கந்தனுக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறேன். எனவே அவன் தந்த பரிசைக்கொண்டு அவனடி நினைந்து பாமாலை எழுத முற்பட்டேன். மேலும்

''ஆடும் பரிவேல் அணி சேவலெனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்'' என்று

தனது ''கந்தர் அநுபூதி''யின் முதற் பாடலில் அருணகிரிநாதர் கந்தனிடம் வேண்டுவது போல், குமரனது மயிலினையும் வேலையும் சேவலையும் நினைந்து நாளெல்லாம் பாடி மகிழும்நற் பேறுதர வேண்டுமென்று குமரேசனை வேண்டி அவனருளாலே அவன்புகழ் பாட விரும்பினேன். மேலும்

''மொய்தார் அணிகுழல் வள்ளியை
வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமங்கு வா ழவைப்போன்
வெய்ய வாரணம் போல
கைதா னிருபது உடையான்
தலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள்
பயந்த இளஞ்சியமே'' என்று அருணகிரிநாதர்

தனது கந்தர் அலங்காரப் பாடலில் அருளியுள்ளது போல, கந்தனை செந்தமிழில் முதலில் வைதவள், அவனது விருப்ப சக்தியாகிய வள்ளியம்மை என்பதால், அவனை செந்தமிழால் யார்வைதாலும், கந்தனுக்கு வள்ளியின் இனிய பழைய அனுபவ நினைவு வந்து மனம் மகிழ்வதால், அவர் மேல் கந்தனுக்கு அன்பு சுரக்கிறது; அவரைக் கந்தன் தன் கருணை யினால் வாழ வைக்கிறான். இது அருட்கவி அருணகிரி நாதனின் வாக்கு என்பதனால், என்கவிதைகளில் எத்தகைய குறைகள் இருந்தாலும், அவை செந்தமிழில் எழுதப்பட்ட பாக்கள் என்பதால், குறைகளை மறந்து கந்தன் அவற்றைத் தன் கருணையால் ஏற்று மகிழ்வான்! என்னையும் இவற்றைப் பாடும் அனைவரையும் வாழ வைப்பான்; என்ற எண்ணம் எனக்கு மேலும் ஆக்கமும் ஊக்கமும் தந்தன. இவற்றை எழுதி கைப்பிரதி தயாரனவுடன் அதை எடுத்துக்கொண்டு ஒருநாள் மாலைப்பொழுதில் குமரமலைக்குச் சென்றேன். அப்போது கோயிலில் இருந்த அர்ச்சகரையும் அருகழைத் தேன். குமரேசன் சந்நிதியில் அமர்ந்தேன்; பாமாலையில் உள்ள பாடல்களைப் பாடத்தொடங்கினேன். பாடத்தொடங் கியதிலிருந்து எல்லாப் பாடல்களையுய் பாடி முடியும் வரை, அந்த மாலை நேரத்திலும், இயற்கைக்கு மாறாக, குன்றி லிருந்து சேவல் இடையிடையே கூவியது எனக்கு மிகுந்த வியப்பாக இருந்தது குமரேசன் என் பாமாலைப்பாடல்களை கேட்டு மனம் மகிழ்ந்திருக்கிறான்; பாமாலைக்கு குமரேசன் தனது ஆசியையும் ஒப்புதலையும் தந்து என்னை ஆட்கொண்டு விட்டான்; அதற்கு அடையாளமாகத்தான் அவனது வெற்றிக்கொடியில் இருக்கும் சேவலைக்கொண்டு, அந்த அந்தி வேலையிலும் அடிக்கடி கூவும்படி செந்திருக் கிறான் என்று மனம் மகிழ்ந்து, உடனிருந்த கோவில் அர்ச்ச கரிடம் கூறினேன். குமரேசனின் அருளாசியைப் பெற்ற மன நிறைவுடன் இரவு இல்லத்திற்குத் திரும்பி வந்தேன்.

எந்த ஒரு பதிவும் அதிகாரப்பூர்வமானது என்பதை நிரூபிக்க உரிய அலுவலரின் அலுவலக முத்திரை பதிக்கப் படவேண்டும். அவ்வாறு முத்திரை இல்லாத எந்த ஆவணமும் சட்டப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. இதை நாமெல்லாம் நன்கு அறிவோம். அருணகிரிநாதர் அனுபூதிபெற்ற அருட்கவி. அவர் பாடல்கள் எல்லாம் குமரனின் சிற்றடி முத்திரை பெற்ற தனிச்சிறப்புடையவை; இறவாப்புகழ் பெற்றவை. இதை அருணகிரி நாதரே தனது கந்தர் அலங்காரப்பாடலில் கூறுகிறார்.

தாவடி ஒட்டும் மயிலிலும் தேவர் தலையிலும் என்
பாவடி ஏட்டிலும் பட்டதன்றோ! படிமாவலி பால்
மூவடி கேட்டு அன்று மூதண்டகூட முகடு முட்டச்
சேவடி நீட்டும் பெருமான் மருகன் தன் சிற்றடியே!

மயிலேறி விளையாடும் குகன் என்பதால், அவனது வாகன மாகிய மயிலின் மீது முருகன் காலடிபட்டது இயற்கை; தவிர்க்க முடியாதது. அதே போன்று தேவ சேனாபதியாகிய முருகனை, தங்கள் குறைகளைத் தீர்க்கும்படி தேவர்கள் வந்து முருகன் தன் திருவடியில் விழுந்து வணங்கியதால், அச்சமயங்களில் முருகன் திருவடி தேவர்களின் தலையில் படுவதும் தவிர்க்க முடியாதது. ஆனால் அருணகிரிநாதரின் "பா" ஏடுகளில் குமரனின் சிற்றடி பட்டது தான் தனிச் சிறப்பு". குமரனின் சிற்றடி பட்டதாக அருணகிரி நாதர் கூறும் நாலாவது இடம், அருணகிரிநாதரின் தலை.

சேல்பட்டழிந்தது செந்தூர் வயலிபொழில்
வேங்கடம்பின்
மால்பட்டழிந்தது பூங்கொடியார் மனம்
மாமயிலோன்
வேல்பட்டழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்புமவன்
கால்பட்டழிந்தது இங்கென்றன் தலைமேல் அயன்
கையெழுத்தே!

என்ற கந்தர் அலங்காரப்பாடலில் அருணகிரிநாதர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு முருகனின் சிற்றடிபட்ட இடங்கள் நான்கு. இவற்றில் இரண்டு அருணகிரிக்கு கிடைத்தன. ஒன்று அவரது பாவடி ஏடு; மற்றொன்று அவரது தலை. இத்தகைய பேரு வேறு யாருக்குக் கிடைக்கும்! இவ்வாறு அருணகிரிக்கு கிட்டியபேறு கிட்டும் அளவிற்கு நான் இன்னும் பக்குவம் பெறவில்லை. அதனால் என் பாடல்களில் குமரேசனின் சிற்றடி முத்திரை நிச்சயம் விழவில்லை. தன்சேவலின் கூவலைக்காட்டி எனது பாடல்களுக்கு குமரேசன் மறைமுகமாக தன் ஒப்புதலை-ஆசியை-வழங்கி இருக்கிறான்.

மேலும், உதாரணத்திற்காக, ஆட்சியாளரிடம் ஒரு கோரிக்கை கொடுக்கப்படுவதாக வைத்துக்கொள்வோம். அக்கோரிக்கையின் தன்மையை ஆராய்ந்து, அதனை தன் ஆதிக்கத்தில் கீழ்மட்டத்திலுள்ள உரிய அலுவலருக்கு அனுப்பி வைத்து கோரிக்கையை நிறை வேற்றிக் கொடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பி வைப்பார். எல்லாக் கோரிக்கைளையுமே மாவட்ட ஆட்சித் தலைவர் தானே நேரில் சென்று விசாரித்து நிறைவேற்றி வைப்பதில்லை. இதுதான் நிர்வாக நடைமுறை. இதேபோன்றுதான் குமரனும் தன் மெய்யன்பர்களின் கோரிக்கைகள் எல்லாவற்றையும் தானே நேரில் வந்து தீர்த்து வைப்பதில்லை. தனது மெய்யடியார்களின் வாயிலாக வேண்டிடும் வரத்தை, அவற்றின் தரம்அறிந்து, வேண்டியவாறு வேலவன் தந்தருள்கின்றான். இவ்வகையில் அவனது திருவடிகளையே தஞ்சமென நம்பிவாழும் எனது வேண்டுகோளை தன்மெய்யடியார்களைக் கொண்டு குமரேசன் நிறைவேற்றிவைத்திருக்கிறான் என்றே நம்புகிறேன். குமரேசன் பாமாலைக்கு அருமையானதொரு அணிந்துரை வழங்கியதன் மூலம் ஒரு முத்திரையையும், பாமாலையின் முதற்பதிப்பை 1-1-1984 திருப்படி விழா நாளன்று குமரேசனின் சந்நிதியில் வெளியிட்டு பெருமைமிக்க சிறப்புரையை வழங்கியதன் மூலம் தனது இரண்டாவது முத்திரையையும், குமரேசனின் மெய்யன்பரும் தமிழ்மொழி

யிடத்தும் தமிழ் இலக்கியங்களிலும் தனி ஈடுபாடும் அதில் பெரும் புலமை பெருமைமிக்கவருமான, மதிப்பிற்கும் மரியா தைக்கும் உரிய சென்னை போக்குவரத்துஆணையர் அவர்கள் குமரேசனின் சார்பில் இப்பாமாலையில் பதித்திருக்கிறார்கள்.

1-1-1984 அன்று இப்பாமாலை வெளியீட்டு விழாவிற்குத் தலைமையேற்று அரியதொரு தலைமை உரை வழங்கியதன் மூலம், தமிழ்மொழியில் புலமையும் தமிழ்பற்றும் உடைய பெருமதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய நமது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் இப்பாமாலையில் தனது முத்திரையைப் பதித்துச் சிறப்பித்திருக்கிறார்கள்.

இதேபோன்று ஆன்மீகத்துறையில் தலைசிறந்து விளங்கும் பன்மொழி இலக்கியங்களில் புலமையும், திறமையும் உடைய, புதுக்கோட்டை திலகவதியார் திருவருள் ஆதின கர்த்தர் தவத்திரு சாயிமாதா அன்னை அவர்கள் இம்மலரை ஆய்ந்து ஆய்வுரையும் வாழ்த்துறையையும் வழங்கியதன் மூலம் தனது ஆன்மீக முத்திரையையும் இப்பாமாலையில் பதித்துள்ளார்கள்.

12-3-1965ல் நான் பொன்னமராவதியில் பணியாற்றிய போது, அதன் அருகே தேனீமலையில் கோயில்கொண்டுள்ள அருள்மிகு சண்முகநாதன் ''தேனீமலைப் பாமாலையை'' என்னைக் கொண்டு வெளியிடச் செய்து அருள்பாலித்தான் இப்பாமாலையைக் கரூரில் வாழ்ந்த மணிதமறைப் புலவர் ஏறு கருவை முத்துரெத்தினபாரதி என்ற பெரும் புலவரைக் கொண்டு எழுதச் செய்து அதை எழுதக் காரணமாகவும், அதை வெளியிடும் பொறுப்பையும் எனக்களித்து அன்று அருள்மிகு சண்முகநாதன் ஆட்கொண்டான். இப்போது, குமரமலை குமரேசன் பாமாலையை என்னை எழுதச்செய்து அதை வெளியிடும் வாய்ப்பையும் 1984 புத்தாண்டு முதல் நாளில் எனக்குத் தந்து குமரன் ஆட்கொண்டதுடன், தமிழகத்தில் மட்டுமின்றி வெளி மாநிலங்களிலிருந்தும் இந் நூலின் பிரதிகளை அனுப்பக்கேட்டு நூற்றுக்கணக்கான

முருகபக்தர்களும் அமைப்புகளும் கடிதங்களை எழுதச்செய்து மிகக் குறுகிய காலத்திலேயே இந்நூலின் இரண்டாவது பதிப்பையும், பாமாலையின் இசைப்பாடல் பதிவு நாடாவையும், குமரனுக்கு உகந்த வைகாசி விசாகப் பெருநாளில் தன் பெயர் தாங்கிய, புதுக்கோட்டை கம்பன் கழகத் தலைவர் திரு. மா. கந்தையா அவர்கள் தலைமையில் புதுக்கோட்டை சுழற் கழகத் தலைவர் திரு. எஸ். ஆண்டியப்பன் பி. பி. ஏ., அவர்களைக் கொண்டு அவனது சந்நதியில் வெளியிடும் பெரும் பேற்றையும் தந்திருக்கிறான். இவற்றை என் வாழ்நாளில் பெறற்கரிய பெரும் பேறாகக் கருதி கந்தனின் கழலடிக்கே இவற்றைக் காணிக்கையாக்குகிறேன்.!

குமரமலை பாமாலைக்கு நல்லதொரு ஆய்வுரை நல்கி அதனை தினமணி நாளேட்டில் வெளிவிட உதவிய அதன் நிர்வாகிக்கும், ஆசிரியருக்கும், ''இந்து'' நாளேட்டின் ஆசிரியருக்கும், வாழ்த்துறை வழங்கியுள்ள அருளாளர்களுக்கும் அறிஞர் பெருமக்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கற்றறிந்த பேரறிவாளர்கள், பெரும் புலவர்கள், கவிஞர்கள், பலர் இருக்க எளியேனாகிய என்னை இப்பணிக்கு ஆளாக்கி வரலாறும், பாமாலையும் எழுத தமிழில் அறிவையும் அதற்கான வாய்ப்பையும் தந்து என்னை இயக்குகின்ற அருள்மிகு குமரேசனின் குன்றாத கருணையை நினைந்து போற்றி, என்றும் அவன் கருணை எனக் கருள் புரிய வேண்டி, இந்நூலை அருள்மிகு தண்டபாணியின், குமரமலை குமரேசனின் திருவடிகளில் காணிக்கையாக்குகின்றேன். இவற்றைப் படித்து, பாடி மகிழ்ந்து அனைவரும் குமரேசனின் குன்றாத கருணையைப் பெற்றுய்ய வேண்டுகிறேன்.

தற்போது சென்னை போக்குவரத்து ஆணையராகவும், பச்சையப்பன் அறக்கட்டளைத் தலைவராகவும் பணியாற்றி வரும் திருமிகு எஸ். டி. காசிராஜன், ஐ.ஏ.எஸ். அவர்கள்

தான் இந்நூல் தோன்றுவதற்கு முதற்காரணம். அவர் 29-3-81 முதல் 27-7-82 வரை புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆட்சித் தலைவராக சிறப்பாகப் பணியாற்றி, இங்கிருந்து தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநராகச் சென்னைக்கு மாறுதலாகிச் சென்றபோது பொன்னமராவதி ஊராட்சி ஒன்றிய ஆணையராகப் பணியாற்றிக் கொண்டிருந்த நான், அவர்களுடன் குமரமலைக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. குமரமலையின் சிறப்பும் அங்கு, கோயில் கொண்டு எழுந்தருளி அருள் புரிந்துவரும்அருள்மிகு குமரேசனின் பெருமையும் அளவிட்டுக் கூற இயலாதன. குருபாத தாசர் எனும் பெரும் புலவரால் ''குமரேச சதகம்'' என்ற நூலின் பெரிதும் போற்றப்பட்டு பாடல் பெற்ற பழமை வாய்ந்த இத்திருத்தலம் அண்மைக் காலத்தில் புகழ்பெற்று, பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து வழிபட்டு மகிழும் நிலையில் நாளுக்கு நாள் பெரிதும் வளர்ந்தோங்கி வருகின்றது. இந்நிலையில் இத்திருத்தலத்தின் அருமை பெருமைகளையும், வரலாற்றுச் சிறப்புகளையும், இதர செய்திகளையும், தகவல்களையும் நன்கினிது விளக்கிக் கூறும் நூல் ஒன்று தேவை என்பதனை நன்குணர்ந்து அப்போது உடன் சென்ற என்னிடம் குமரமலை வரலாற்றை எழுதும்படி கூறினார்கள். அதை குமரேசனின் ஆணையாக ஏற்றுக்கொண்டு, இத்தொண்டில் ஈடுபட்டேன். வரலாற்றுச் செய்திகள் சேகரிப்பதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக இப்பணி தாமதமாக நிறைவேறியுள்ளது. இந்நூலை எழுத ஆக்கமும் ஊக்கமும் தந்ததுடன், இத்தகைய பணியில் நான் தொடர்ந்து ஈடுபட எழுச்சியும், உற்சாகமும் பெறும் வகையில் கருத்துக் கருவூலமெனப் போற்றத்தக்க வகையில், பெருமை மிக்க அணிந்துரையையும் நல்கிச் சிறப்பித்திருக்கிறார்கள். குமரமலை குமரேசனின் பால் தனக்குள்ள அளவற்ற பக்தியினால், சிரமத்தைப் பாராமல் சென்னையிலிருந்து குமரமலைக்கு வருகை தந்து 1-1-1984 அன்று இந்நூலை வெளியிட்டு இத்தொண்டில் என்னை ஈடுபடுத்திய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய அப்பெருந் தகைக்கு என் நன்றியும் வணக்கமும் என்றும் உரித்.

தாகும். குமரேசனின் குன்றாத கருணை அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் என்றும் நிறைந்து வளமுடன் பன்னலமும் பெற்று பல்லாண்டு வாழக் குமரனடி பணிந்து வேண்டு கிறேன்.

இந்நூலை எழுத எனக்கு ஆதரவு தந்து 1—1—1984 அன்று இவ்வாண்டு திருப்படித் திருவிழாவினைத் தொடங்கி வைத்து இந்நூல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமையேற்று சிறப்பித்த பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இரா. கற்பூரசுந்தரபாண்டியன், ஐ. ஏ. எஸ்., அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியினையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் குமரேசனின் குன்றாத கருணை துணை நின்று எல்லா நலன் களும் வளமும் நிறையு வேண்டுகிறேன்,

இந்த வரலாற்றைத் தொகுக்கத் தேவையான விவரங் களைத்தந்துஇத்தொண்டினில் எனக்குப் பெரிதும் உதவியாக இருந்த, குமரேசப் பெருமான்மீது பெரிதும் ஈடுபாடு கொண்ட, ''குமரமலைப் பஞ்சரத்னம்'' என்ற பாமாலையை இயற்றி குமரனுக்கு சூட்டி மகிழ்ந்துள்ள, திருக்கோகர்ணம் சோதிடவித்துவான் திரு வை. சுப்பிரமணியபாரதி அவர்கள், புதுக்கோட்டை திருக்கோயில்களின் தக்கார் திரு.எஸ்.வி.எஸ். வெங்கடாசலம் அவர்கள், நிர்வாக அலுவலர் திரு.அ. சேதுரத்தினம் அவர்கள், புதுக்கோட்டை ஸ்ரீ சண்முக விலாஸ் மிட்டாய் கடை உரிமையாளர் புதுக் கோட்டை திருமுருகன் திருவருள் திருப்புகழ் மன்றத் தலைவர் வேலைப்பிடித்திருக்கும் சண்முகநாதனின் காலைப் பிடித்திருக்கும் திரு அ. வே. மலையாண்டி சேர்வை அவர்கள், புதுக்கோட்டை ஸ்ரீ முனியாண்டி விலாஸ் உணவக உரிமையாளர் திரு. அ. அயோத்தி நாயுடு, ஊர்நல அலுவலர் கவிஞர் திரு. பா. பாலுசாமி ஆகியோர் எனது பாராட்டுதலுக்கும் நன்றிக்கும் உரியவர்கள்.

ஈட்டிய செல்வத்தின் ஒரு பகுதியை அறச்செயல்களுக்கும், தெய்வீகத் திருப்பணிகளுக்கும் செலவிட்டு அண்மையில் பொன்னமராவதி ஒன்றியம் அரசமலை கணேசபுரத்தில் அருள்மிகு ஜெயங்கொண்ட விநாயகர் ஆலயத்திருப்பணியையும், நெய்வேலி கிராமத்தில் சிவன்கோயில் திருப்பணியையும் செய்து முடித்து, இம்மையில் சிறப்பையும் மறுமை வாழ்விற்கு முதலீடும் செய்து வரும் பல்துறைப்பணி ஒப்பந்தக்காரர் வெள்ளக்குடி திரு. முரு. மாணிக்கம் அவர்கள் அண்மையில் இனம்காணமுடியாத நோயினால் துன்புற்றார். அப்போது குமரமலை அருள்மிகு தண்டபாணியின் திருநீற்றைக் கொடுத்து, நோய் குணமானதும் குமரமலை வரலாறும் பாமாலையும் அச்சிட்டு வெளியிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன். குமரேசன் கருணையால் நோய் குணமாகியது. அவரைக் கொண்டு இத்தொண்டை மேற்கொள்ளச் செய்ய திருவுளம் கொண்டுதான் குமரன் அவருக்கு நோயைக் கொடுத்து, அதை நீக்கி ஆட்கொண்டான் போலும்! இந்நூலின் முதற்பதிப்பை அச்சிட்டு வெளியிடும் பொறுப்பை ஏற்று சிறப்புடன் நிறைவேற்றித் தந்த அவருக்கும், அவரது குடும்பத்தார் அனைவருக்கும் குமரேசனின் கருணை என்றும் நின்று துணைபுரிய வேண்டி நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலின் இரண்டாவது பதிப்பை அச்சிட்டு வழங்க முன் வந்த குமரனின் மெய்யன்பர் புதுக்கோட்டை, காமராஜபுரம் திரு. பி. வி. அனுமந்தராவ் அவர்களுக்கும், இதற்கான பேப்பரை நன்கொடையாக மனமுவந்து தந்து மகிழ்கின்ற புதுக்கோட்டை நிஜாம் பேப்பர் & போர்டு மில்லின் மேலாண்மை இயக்குநர் மதிப்பிற்குரிய ஜனாப். ஏ. ஆர். நூர்முகமது அவர்களுக்கும், இந்நூல் வெளியீட்டு விழாவில் தலைமையேற்று மகிழ்கின்ற, புதுக்கோட்டை கம்பன் கழகத் தலைவர் திரு. மா. கந்தையா அவர்களுக்கும், இந்நூலையும் பாமாலை இசைப்பாடல் பதிவு நாடாவையும் வெளியிட்டு மகிழ்கின்ற, புதுக்கோட்டை சுழற்கழகத் தலைவர் திரு. எஸ். ஆண்டியப்பன் பி. பி. ஏ., அவர்களுக்கும், பாமாலை இசைப் பாடல்களையும் பதிவு நாடாவில் பதிவு செய்து மகிழ்கின்ற

பத்மஸ்ரீ இசைப் பேரறிஞர் டாக்டர் மதுரை. சோமு அவர்களின் சிஷ்யர், அவரது எதிரொலி, ''அருள் இன்னிசை மாமணி'' மழையூர் திரு. எஸ். சதாசிவம் அவர்களுக்கும், இவ்விழாவில் பங்கேற்று மகிழ்கின்ற அருளாளர்கள், அறிஞர் பெருமக்கள் அனைவருக்கும் குமரனின் கருணை குன்றாது பெருக வேண்டி நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மிகக் குறுகிய காலத்தில் முதற்பதிப்பைப் போலவே இந் நூலின் இரண்டாவது பதிப்பையும் கை வண்ணம் சிறக்க அழகுற அச்சிட்டு உதவிய புதுக்கோட்டை மதராஸ் ரிப்பன் அச்சகத்தாருக்கும், அதன் மேலாளர் அன்பிற்குரிய திரு. வீர. காசிவிஸ்வநாதன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1-1-1984 புத்தாண்டு நாளன்று அரசு அலுவலர்கள் அமைப்பான ''புதுக்கோட்டை தெய்வீகப் பேரவையினர்'' நடத்தும் குமரமலை அருள்மிகு தண்டபாணியின் மூன்றாவது ஆண்டு திருப்படித் திருவிழா நாளன்று இந்நூலின் முதற் பதிப்பையும், 15-5-84 வைகாசி விசாகப் பெரு நாளன்று இரண்டாவது பதிப்பையும் வெளியிட்டு உதவ முன் வந்த புதுக்கோட்டை தெய்வீகப் பேரவையினருக்கும், இதற்கு தான் நடத்தும் வைகாசி விசாக திருப்படித் திருவிழாவில் வாய்ப்பளித்த புதுக்கோட்டை திருமுருகன் திருவருள் திருப் புகழ் மன்றத்திற்கும், அதன் தலைவர் திரு. அ. வே. மலையாண்டி சேர்வை அவர்களுக்கும் என் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களுக்கும் இத்தொண்டில் பங்கேற்ற ஏனைய பெருமக்கள் அனைவருக்கும் அருள்மிகு தண்டபாணியின் கருணை என்றும் துணை புரிய வேண்டுகிறேன்.

புதுக்கோட்டை<br>10—5—1984

அன்பன்,<br>ச. சீனிவாசன்

# குமரமலை

# அருள்மிகு தண்டபாணி திருக்கோயில்

## தல வரலாறு

''குன்று இருக்கு மிடமெல்லாம் குமரன் இருக்கு மிடம்'' என்ற கூற்றுக்கு ஏற்ப, புதுக்கோட்டை பெருமாநாடு கொன்னையூர் நெடுஞ்சாலையில், பெருமாநாட்டைக் கடந்ததும் சாலையின் தென்புறம் நம் கண்ணையும் கருத்தை யும் கவர்வது குமரமலை என்னும் எழில்மிகு குன்று. இக் குன்றின்மீது அருள்மிகு தண்டபாணி குமரேசன் என்ற பெயர் தாங்கி எழில் உருவுடன் எழுந்தருளி கோயில் கொண்டு வேண்டுவோர்க்கு வேண்டிய வரமருளி வருகிறார். நெடுஞ் சாலையில்11வதுகிலோமீட்டரை அடைந்ததும் அவ்விடத்தில் ஆலமரங்களும் கொன்னை மரங்களும் நிழல் தந்து கொண்டிருக்கின்றன. இச் சூழ்நிலை சற்று நின்று இளைப் பாறிச் செல்லத் தூண்டும் வகையில் உள்ளது. இங்கிருந்து தெற்கே நோக்கினால் எழில்மிகு வண்ண வளைவு நம்மை வரவேற்கிறது. வளைவின் வலதுபுறம் கிழக்கு நோக்கியுள்ள சிறியதொரு கோயிலில் அருள்மிகு சித்தி விநாயகர் கருணை பொழியும் கண்களோடு நம்மை வரவேற்று தன் இளவல் தண்டபாணியைக் காண வழிகாட்டுகிறார். தங்கி இளைப் பாறிச் செல்ல அழகான ஆறுகால் மண்டபம் ஒன்றும் அருகில் கட்டப்பட்டுள்ளது. குமரமலையைக் கண்டு மகிழ்ந்தவாறு, பசுவை நோக்கிச் செல்லும் கன்றின் நிலையில், தெற்கு நோக்கி சுமார் ஒரு மைல்தூரம் கால்நடையாகச்செல்கிறோம். இந்தச் சாலைக்கு கருங்கற் பரப்பி அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தாரால் சீராகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. சாலையிலிருந்து கிழக்கு நோக்கி குன்றிற்குச் செல்லத் தொடங்கும்போது, குமரமலையைச் சென்றடைய இந்த இடத்தில் எழுப்பப்பட்டுள்ள மயில் மண்டபத்திலுள்ள மயில்

நமக்கு வழிகாட்டுகிறது. இதைக் கண்டதும் அருணகிரிநாதர் கந்தர் அலங்காரத்தில் பாடியுள்ள

''விழிக்குத் துணை திருமென் மலர்ப்
பாதங்கள் மெய்மை குன்றா
மொழிக்குத் துணை முருகா வெனு
நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு
தோளும் பயந்த தனி
வழிக்குத்துணை வடிவேலும்
செங்கோடன் மயூரமுமே''

என்ற வரிகள் நமது நினைவில் பளிச்சிடுகின்றன. நம்மை யறியாமல் நம்உள்ளம்இப்பாட்டை தன்னுள்பாடிமகிழ்கிறது!

குன்றின் மீது ஏறுமுன், குன்றின் படி மண்டபத்திற்கு இடதுபுறத்தில் பெரியதொரு அரசமரம் செழித்து வளர்ந்து நிழல்தந்து கொண்டிருப்பதைக் காண்கிறோம். அதன் அடியில் எழுப்பப்பட்டுள்ள, தகரமும் ஓடும் வேய்ந்த சிறிய தொரு கோயில். இதில் அருள்மிகு விநாயகப் பெருமான் எழுந்தருளியுள்ளார். இக்கோயிலின் முன்னால் உள்ள குளத்தில் இறங்கி தூய்மைப்படுத்திக் கொள்கிறோம். விநாயகப் பெருமானின் அருள்வேண்டி வணங்குகிறோம்.

குன்றின்மீது ஏற முயற்சிக்கும் நம்மை, அங்கு எழுப்பப் பட்டுள்ள எழில் படிமண்டபம் வரவேற்று, குமரனைக் காண விரும்பும் நம் ஆவலைப்புரிந்து கொண்டதுபோல் தடை ஏதுமின்றி படிக்கட்டுகளின் வழியாக நம்மை அனுப்பி வைக்கிறது. படி மண்டபத்தில் வலது புறத்தில் பக்தர்கள் தங்கி ஒய்வெடுக்கக் கட்டப்பட்டுள்ள அழகிய எண்கால் மண்டபம் நம் கவனத்தைக் கவர்வதாக அமைந்துள்ளது. குன்றுநோக்கி நடந்து திருக்கோயில் அடையும் நம்கருத்தை, குன்றின் மேல் எழுப்பப்பட்ட மதில்சுவர் வாயிலை அடைந்ததும், இருமருங்கிலும் பதிக்கப்பட்டுள்ள கல்வெட்டு

கள் கவர்கின்றன. இடதுபுறம் உள்ள கல்வெட்டில் அருள்மிகு தண்டபாணி தனது பரம பக்தரான சேதுபதிக்கு இரங்கி இங்குவந்து கோயில் கொண்ட வரலாறும், வலதுபுறம்உள்ள கல்வெட்டில் குமரேச சதகத்தின் 'பூமிக்கோர் ஆறுதலையாய் வந்து'' எனத் தொடங்கும் முதலாவது பாடலும் இடம் பெற்றுள்ளன. குன்றை அடைந்ததும் திருக்கோவிலின் முன் உள்ள கொடிக்கம்பமும், மயில் மண்டபமும், நம்மைக் கவர் கின்றன.

கோயிலின் கருவறையில் அருள்மிகு தண்டபாணி குழந்தை வடிவேலனாக, குமரேசனாக, மேற்கு நோக்கி காட்சி தந்து அருளை அள்ளி வழங்கிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். கோவில் முன் மண்டபத்தில் தென்மேற்கு பகுதியில் அருள்மிகு விநாயகர், காசிலிங்கம், விசாலாட்சி ஆகியோர் எழுந்தருளியுள்ளனர். மண்டபத்தின் சுவர்களில் எழுதப்பட்டுள்ள குமரன் புகழ்பாடும் அருணகிரிநாதரின் பாடல்கள் நம் கருத்தைக் கவர்கின்றன. திருக்கோவிலின் இடதுபுறம் சுற்றுமதில் சுவருக்கு வடக்கில் குன்றின் சரிவில் உள்ள சிறிய கோவிலில் இடும்பன் வடக்கு நோக்கி எழுந் தருளி வழிபடுவோரின் இடும்பைத் தீர்த்து அருள் பாலித்துக் கொண்டிருக்கிறான். கீழ்புறத்தில் மடப்பள்ளி உக்கிராண் அறைகள் உள்ளன. குன்றின் வலதுபுறம் உள்ள மலைச் சரிவில் மதில்சுவர் எழுப்பப்பட்டுள்ள அழகிய சுனையும், திருமணக் கூடமாகவும் அன்னதானக் கூடமாகவும் பயன் படுத்தப்பட்டு வரும் தகரக்கூறை வேய்ந்த மண்டபமும் அவற்றிற்குச் செல்லும் படிக்கட்டுகளும் உள்ளன. கோயில் பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் சுமார் 100 ஆண்டு களுக்கு மேல் வயதுள்ள அழகிய மகிழமரம் ஒன்று கம்பீரமாக நின்று மகிழ மலரால் மணம் கமழ்ந்து கொண்டிருக்கிறது. வடமேற்கில் இதே போன்று சரக்கொன்னைமரம் ஒன்று திருக்கோவிலுக்கு அழகூட்டிக் கொண்டிருக்கிறது. இக் கோவிலின் தல விருட்சம் ''சங்கம் செடி''. தற்போதுள்ள தீர்த்தத் தொட்டிக்கு அருகில் இருந்த சங்கம்புதர் அழிந்து விட்டதாகக் கூறப்படுகிறது. தற்பொழுது அந்த இடத்தில் புதிதாக சங்கம் செடி வைத்து வளர்க்கப்பட்டு வருகிறது.

குமரமலையின் மேல் நின்று நோக்கினால் நாற்புறமும் ஏரிகளால் சூழப்பட்டுள்ளதைக் காணலாம். இவற்றில் நீர் நிரம்பியுள்ள காலங்களில் இக்குன்று எழில் மிகுந்து காணப் படும். குமரமலையின் தென்கிழக்கில் சுமார் 2 கல் தூரத்தில் தேவர்மலை என்ற சிறு குன்று உள்ளது. இங்கு அருள்மிகு விநாயகர் கோயில் கொண்டுள்ளார். இக்குன்றில் ஒரு சுனையும் சிவலிங்கமும் உள்ளன. இச்சுனையில் நீராடி குகையில் உள்ள சிவலிங்கத்தை வழிபட்டால் மகப்பேறு இல்லாதவர்களுக்கு மகப்பேறு கிட்டும் என நம்பப்படுகிறது. இதனால் இன்றுவரை மகப்பேறு வேண்டுவோர் இங்குவந்து வழிபட்டுச் செல்வது வழக்கமாக இருந்து வருகின்றது.

குமரமலையின் கிழக்கு தெற்குப் பகுதிகளில் குன்னக்குடிப் பட்டி, குருக்கப்பட்டி, கிளாப்பட்டியும் வடக்கில் அண்மையில் தோன்றியுள்ள முருகராஜ்நகர் ஆகிய சிற்றூர்களும் உள்ளன. தெற்கே சுமார் 4மைல் தூரத்தில் நற்சாந்துபட்டியை அடுத்துள்ள மலையக்கோவிலை இங்கிருந்தவாறே காணலாம். இங்குள்ள திருக்கோயிலில் அருள்மிகு சண்முகநாதன் கோயில் கொண்டுள்ளார். குமரமலைக்கும் மலையக்கோயிலுக்கும் இடையில் தொடங்கப்பட்டுள்ள இணைப்புச்சாலை அமைக்கும் பணி நிறைவு பெற்றால் இப்பகுதியில் உள்ள பக்தர்களுக்குப் பேருதவியாக இருக்கும்.

குமரமலையில் அருள்மிகு தண்டபாணி திருக்கோயில் தோன்றியதற்கான காரணம் பற்றிய பக்திததும்பும் வரலாறு ஒன்று வழங்கி வருகிறது. குன்றின் மேலுள்ள கோயிலின் மதில்சுவரில் பிரதானநுழைவாயிலின் இடதுபுறம்1-4-1971ல் பதிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் இவ்வரலாற்றின் சுருக்கம் காணப்படுகிறது. பழனியம்பதியில் எழுந்தருளியிருக்கும் பழனியாண்டவனாகிய அருள்மிகு தண்டபாணியின் பரம பக்தனான, குமரமலையைஅடுத்த குன்றக்குடிப்பட்டி கிராமத் தைச் சார்ந்த, மறவர் குலத்தில் தோன்றிய, அய்யாச்சாமித் தேவர் என்றழைக்கப்பட்ட சேதுபதி ஒருவர் இப்பகுதியில் வாழ்ந்து வந்தார். இவர் பழனியாண்டவனின்பால் அளவற்ற

பக்தி கொண்டவர். இவர் ஆண்டுதோறும் பழனியம்பதிக்கு காவடி எடுத்துச் சென்று பழனியாண்டவனைக் கண்டு வணங்கி இன்பம் எய்தி வந்தார். இவர் வயது முதிர்ந்து மூப்பு எய்திய காலத்தில், வழக்கம்போல் பழநிக்குச் சென்று பழனியாண்டவனைக் கண்டு தரிசிக்க இயலவில்லையே என்று மனதில் பெரும் ஏக்கமும் வேதனையும் கொண்டார். வேண்டிடும் அடியவரின் வேதனைம் போக்கும் வேலன் தன் மெய்யடியாரின் ஏக்கத்தைப் போக்கத் திருவுளம் கொண்டார். ஒரு நாள் இரவு இம்மெய்யடியாரின் கனவில் தோன்றினார். இன்று அருள்மிகு தண்டபாணி கோயில்கொண்டு எழுந்தருளி யிருக்கும் குமரமலைக் குன்றின்மீதுசங்கம்செடி புதருக்கருகில் தான்வந்து தங்குவதாகக் கூறினார். அவ்வாறு தான் வந்ததற்கு அடையாளமாக அந்த இடத்தில் விபூதிப்பை ஒன்றும் உருத்திராட்ச மாலையும், பிரம்பும் காணப்படும் என்று கூறி மறைந்தார். மெய்யடியார் மறுநாள் காலையில் குமரமலைக் குன்றின் மேல் சென்று சங்கம் புதர் அருகே பார்த்த போது அளவிலா ஆனந்தம் கொண்டார். தன் கனவில் தண்டபாணி கூறியபடியே விபூதிப்பையும், உருத்தி ராட்ச மாலையும், பிரம்பும் எலுமிச்சம்பழமும் இருக்கக் கண்டு எல்லையில்லா ஆனந்தம் கொண்டார். தன்னை ஆட் கொண்டு அருள்பாலிக்கத் திருவுளம் கொண்டு குன்றிற்கு வலியவருகை தந்துள்ளகந்தனின் கருணையை எண்ணிஅகம் மகிழ்ந்தார். தொடக்கத்தில் அந்த இடத்தில் வேல் ஒன்றை வைத்து வழிபடத் தொடங்கினார். பிறகு கூரைக்கூடம் ஒன்றை எழுப்பி அதில் தண்டபாணியை வைத்து வழிபட்டு வந்தார். தண்டபாணியின் தளராத கருணைக்குப் பாத்திர மான இம்மெய்யடியார் செய்த தெய்வத்திருத் தொண்டின் பயனை, இன்று குமரமலையில் கோவில் கொண்டுள்ள குமரேசனை வணங்கி வழிபட்டு, நாமெல்லாம் அவன் அருள் வெள்ளத்தில் இன்பம் துய்த்துப் பயனடைந்து வருகிறோம். அருள்மிகு குமரேசனைப் போலவே இந்த மெய்யடியாரும் நம் அனைவரது போற்றுதலுக்கும் வணக்கத்திற்கும் உரிய வரன்றோ!

இதே போன்று, தன் மெய்யடியாரின் துயர்களைந்து மகிழ்விக்க தன்னை நாடி வரமுடியாத நிலையில் தானே அவ்வடியாரின் இல்லத்திற்குச் சென்று தங்கி அருள் புரிந்த வரலாறு திருச்செந்தூரிலும் நிகழ்ந்துள்ளது இங்கு நினைந்து மகிழத்தக்கது. குலசேகரப்பட்டணத்தில் முத்தணைந்த பெருமாள் பிள்ளை என்ற சைவப் பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். செந்திலாண்டவன் திருக்கோயில் இவரது இல்லத்திலிருந்து எட்டு மைல் தூரத்தில் இருந்தது. எட்டு மைல் தூரமும் நடந்தே வந்து ஒவ்வொரு நாளும் இக்கோவிலின் இராக்கால பூசையின் பொழுது தவறாது வழிபட்டு வந்தார். ஒருநாள் இரவு பயங்கர இடியுடன் கூடிய கொட்டும் மழை. அவருக்கோ வயது முதிர்ச்சியில் ஏற்பட்ட தளர்ச்சி. இந்நிலையிலும் செந்திலாண்டவனை வழிபடாது திரும்புவதில்லை என்று மனதில் உறுதி கொண்டு கால் சென்ற வழியெல்லாம் நடந்தார். அப்போது தன்முன்பாக அப்பேய் மழையிலும் ஓர் உருவம் விளக்கு ஏந்தி, சேகண்டி தட்டி, தனக்குவழிகாட்டுவதாக உணர்ந்தார். செந்திலாண்டவன்திருக்கோவிலை அவர் அடைந்தவுடன் ஆளோ, விளக்கு ஒளியோ, சேகண்டி நாதமோ எதுவும் இல்லை. அடியவர் வழிபாடு செய்து முடித்து தன் இல்லத்திற்குத் திரும்பச் சென்றார். அன்றிரவு செந்திலாண்டவன் அவரது கனவில் தோன்றினார். இனி இராக் காலத்தில் தம்மைக்காண செந்திலுக்கு வரவேண்டாம்; இராக்கால பூசை முடிந்தவுடன் அவரது இல்லத்திற்கு தாமே வருகை தருவதாக அருள்வாக்கு வழங்கினார். அன்று முதல் செந்திலாண்டவனைத் தன் இல்லத்திலேயே வழிபட்டார். அதனால் இன்றும் அவரது வீட்டிற்கு ''படுக்கை வீடு கோயில்'' என்று பெயர் நிலவுகிறது. செந்திலாண்டவனின் சீரோங்கும் கருணை தான் என்னே! மெய்யடியாரின் விருப்பத்தை நிறைவேற்ற, அவர் இருக்குமிடம் தேடி ஓடி வந்து ஆட்கொள்ளும் அருளில் கந்தனுக்கு நிகர் கந்தனேயன்றி வேறு யாராக இருக்க முடியும்?

நல்லடியார் பலரது திருத்தொண்டினால் குமரமலை அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் படிப்படியாக

வளர்ந்து இன்றைய நிலையில் சிறந்து விளங்குகிறது. இத்தகைய மெய்யடியார்களை நினைந்து போற்றுவதும் நன்றி பாராட்டுவதும் நமது கடமையன்றோ?

கோதண்டராமபுரம் என்ற குன்னக்குடிப்பட்டியில் பிறந்த அய்யாச்சாமித் தேவன் மரபினரும் சேந்தமங்கலம் நரசிம்மபாரதி என்பவரது குமாரர்களுமான சபாபதி பாரதி, அண்ணாச்சாமி பாரதி வகையறாவினர் குமரமலைக் குன்றின் மீது நாற்கால் மொட்டை மண்டபம் எழுப்பி அதில் அருள்மிகு தண்டபாணியை எழுந்தருளச் செய்து, சுமார் கி.பி. 1851ம் ஆண்டில் முதலாவதாக குடமுழுக்குத் திருப்பணி செய்துள்ளனர். அய்யாச்சாமி தேவன் மரபினரால் ஒரு கால பூசையுடன், குன்னக்குடிப்பட்டி கிராம மக்களால் இத்திருக்கோவில் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. இப்பகுதியைச் சார்ந்த கிராம மக்களால் தைப்பூசம், பங்குனி உத்தரம், சிவராத்திரி, கார்த்திகை முதலிய விசேட காலங்களில் சிறப்பாக விழாக்கள் எடுத்து நடத்தப்பட்டு வந்துள்ளன' தைப்பூச நாளன்றும் பங்குனி உத்தரம் 10ஆம் நாள் விழா வன்றும் குமரமலையிலிந்து குன்னக்குடிப்பட்டிக்கு அருள்மிகு தண்டபாணியை எழுந்தருளச் செய்து வெள்ளாற்றில் தீர்த்த வாரியம் நடத்தப்பட்டு வந்துள்ளது. இந்து அறநிலையப் பாதுகாபபுத்துறையின் புதுக்கோட்டை திருக்கோவில்கள் அறங்காவல் குழுவினரால் இன்றும் இவ்விழாக்கள் தொடர்ந்து சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

புதுக்கோட்டை மன்னர் பரம்பரையில் தொண்டமான் வம்சத்திற்கு முந்திய பல்லவராயர்கள் காலத்தில் திருமிகு இராமச்சந்திர மகாராஜரவின் பாட்டனார் பல்லவராயரவர்கள் ஒருநாள் குமரமலையை அடுத்த புல்வயல் காட்டிற்கு வேட்டைக்குச் சென்றார். அப்போது குமரமலைக் குன்றின் மீது அருள்மிகு தண்டபாணி கோவில் கொண்டுள்ளதைக் கேள்விப்பட்டு சென்று கண்டு வழிபட்ட போது பக்திவயப்

பட்டார். அவர் இக்கோயிலை விரிவுபடுத்தி முன் மண்டபமும் கோபுரங்களும் எழுப்பி, அருள்மிகு விநாயகர், இடும்பன் விக்கிரகங்களும் எழுந்தருளச் செய்து, சுமார் 1898ம் ஆண்டில் முறைப்படி குடமுழுக்கு திருப்பணியும் செய்துள்ளார்.

சுமார் 1912ஆம் ஆண்டில் நற்சாந்துபட்டி, பனையப்பட்டி நகரத்தார்களால் குன்றின் மேல் உள்ள கோவிலுக்குச் செல்ல மலைப்படிக் கட்டுகள் கட்டப்பட்டுள்ளன. நற்சாந்துபட்டி திருவாளர்கள் காடப்பச் செட்டியார், மெய்யப்பச் செட்டியூார் வகையறாவினரால் சத்திரம் ஒன்றும் பசுமடமும் ஏற்படுத்தப் பட்டு, வழிபாட்டிற்கு பாலும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இம்மடமும் சுமார் 1948ல் ஏற்பட்ட புயலினால் இடிந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

நற்சாந்துபட்டி திரு. காடப்ப செட்டியார் வகையறா வினரால் குன்றின் தென்புறம் தகரக்கூரை வேய்ந்த திருமணக்கூடம் கட்டப்பட்டுள்ளது. இப்போது இது அன்னதான மடமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திருக்கோவிலின் சுற்று மதில் சுவரும் சுனைக்கு சுற்றுச் சுவரும் படிக்கட்டும் புதுக்கோட்டை பேட்டையார் சமூகத்தினரால் கட்டப்பட்டுள்ளன.

திருக்கோவிலின் அர்த்த மண்டபத்தின் படிகள், நிலை கதவு, பித்தளைக் கவசம் மற்றும் வெள்ளி மயில் வாகனமும் கடியாபட்டி திரு. தீ. சொ. ராமன் செட்டியார் அவர்களால் 1-11-1927ல் உபயமாகச் செய்து கொடுக்கப்பட்டுள்ளன

இத்திருக்கோவில் புதுப்பிக்கப்பட்டு சுபகிருது ஆண்டு பங்குனித் திங்கள் 12ம் நாள் (31—3-1963)ஞாயிற்றுகிழமை யன்று குடமுழுக்குப் பெருஞ்சாந்தி விழா புதுக்கோட்டை பேட்டையார்களால் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது.

இத்திருக்கோவிலின் மின் வசதிக் குழுவினரால் 22-1-1967ல் இத்திருக்கோவிலுக்கு மின் வசதி செய்து கொடுத்து ஒளி பரவச் செய்யப்பட்டுள்ளது.

சுமார் 1964ம் ஆண்டில் குன்றின் மீதேறும் படிக்கட்டு களின் தொடக்கத்தில் எழில்படி மண்டபத்தை புதுக்கோட்டை நகரிலுள்ள ஸ்ரீமுனியாண்டி விலாஸ் உணவக உரிமையாளர் திரு. ஏ. அயோத்தி நாயுடு அவர்களும் அவரது துணைவியார் திருமதி. ராஜம்மாள் அவர்களும் கட்டிக் கொடுத்துள்ளனர். இங்குள்ள திருக்குளத்தைச் சீர்செய்யும் பணியும் இவர்களால் தொடங்கப்பட்டு, புதுக்கோட்டை ஸ்ரீஷண்முக விலாஸ் மிட்டாய்க் கடை உரிமையாளர் திரு.அ.வே. மலையாண்டி சேர்வை அவர்களால் நிறைவு செய்யப்பட்டு பக்தர்களுக்குப் பயன்பட்டு வருகிறது. இவரால் கோயிலின்முன்மண்டபத்தில் குமரேசனின் எழில் உருவைக்காணத்தக்க வகையில் பெரிய தொரு நிலைக் கண்ணாடியும் அமைக்கப்பட்டுள்ளது.

குன்றிற்குச் செல்லும் சாலையின் தொடக்கத்தில் அலங்கார வளைவு,அருப்புக்கோட்டை திரு.எஸ்.குமாரசாமி செட்டியார் அவர்களால் 3-12-1970ல் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. இவ்வளைவிற்கு வலது பக்கத்தில் பக்தர்கள் தங்கி இளைப்பாறிச் செல்ல ஆறு காலுடன் அழகான தங்கு மண்டபம் குருவிக்கொண்டான்பட்டி திரு. சொ. முத்துப் பழனியப்பசெட்டியார்,திருமதி. மீனாட்சிஆட்சி ஆகியோரால் 17-1-1971ல் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

குமரமலையை நோக்கி இருக்கும் எழில் மயில் மண்டபத்தை புதுக்கோட்டை டாக்டர்திரு.கே.பார்த்தசாரதி அவர்களும், அவரது துணைவியார் திருமதி. சுசீலாராணி அவர்களும் 16-1-1972ல் கட்டி வைத்துள்ளனர்.

அலங்கார வளைவின் வலப்புறமுள்ள, புதுக்கோட்டை திரு. அ. கி. வேம்பு பிள்ளையவர்களால் கட்டப்பட்டுள்ள அருள்மிகு விநாயகர் கோவில், புதுக்கோட்டை திரு. ஆர். தனபாலன் அவர்களால் புதுப்பிக்கப்பட்டு 18-3-1973ல் குடமுழுக்கு செய்து வைக்கப்பட்டுள்ளது.

படி மண்டபத்தின் வலது பக்கத்தில் பக்தர்கள் தங்கி ஓய்வு எடுக்க ஏற்ற வகையில் அழகான மண்டபம் ஒன்றை மிதிலைப்பட்டி மு. சித. மகள் மங்களத்தின் நினைவாக பனையப்பட்டி திருமதி சொ. சி. தி. சுவர்ணவல்லிஆச்சி என்ற மெய்யன்பர் 4-2-1974ல் கட்டி முடித்துள்ளார்.

இத்திருக் கோவிலின் மூலத்தான விமானம், மயில் வாகனங்கள் பழுது பார்க்கப்பட்டு இதர திருப்பணிகளும் நிறைவு செய்யப்பட்டு குடமுழுக்குப் பெருஞ்சாந்தி விழா காளயுந்தி ஆண்டு சித்திரைத் திங்கள் 8ம் நாள்(21-4-1978) வெள்ளிக்கிழமையன்று நெய்வேலி திரு. V. சுப்ரமணிய அய்யர் செலவில் திருச்சி இந்து அறநிலைய ஆட்சித் துணை ஆணையர் உயர்திரு ஒ. ஆறுமுகம், சென்னை வைணவ அருட்கவி சாதுராமசுவாமிகள் ஆகியோர் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றுள்ளது. 1-6-1978 ஞாயிறன்று மண்டல அபிஷேக நிறைவு விழாவும் இனிது நடைபெற்றுள்ளது. அருட்கவி ஸ்ரீ சாதுராம சுவாமிகளின் ''குமரகிரிக் குமரன் குயிற் கண்ணிப்'' பாடல்கள் கருங்கல்லில்செதுக்கப்பட்டு வடபுறம் மதில் சுவரில் பதித்துவைக்கப்பட்டுள்ளன. இதை திருமயம் வெங்கிடு அய்யர் குமாரர் திரு. சுப்பிரமணியன் குடும்பத்தினர் உபயமாக வழங்கியுள்ளனர்.

மேலே விவரித்துள்ள அனைத்துத் திருப்பணிகளும் தொடங்கி சிறப்புடன் நடைபெறுவதற்கு முதற்காரணமாக இருந்தவர் குமரமலைதண்டபாணியின்பால் மாறாதபக்தியும் அன்பும் கொண்டு, அண்மைக் காலம்வரைபுதுக்கோட்டையில் வாழ்ந்துவந்த மதுரை அப்பு என்ற பிச்சை செட்டியாராவார். அவர் புதுகோட்டை நகரில் கிருஷ்ணா காபி நிறுவனம் தோன்றியது முதல் அதை நிர்வகித்து வந்து அண்மையில் குமரனடிசேர்ந்தார். இத்திருக்கோவிலுக்கு மின்ஒளி வசதி பெற, அவர் எடுத்துக்கொண்ட முயற்சி நினைந்து பாராட்டுதற்குரியது. அப்போது தமிழகத்தில் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் 1967ம் ஆண்டு சனவரித்திங்களில் ஓர்நாள் புதுக்கோட்டை

யிலிருந்து பெருமாநாடு வழியாகக் குமரமலையைக் கடந்து சென்றபோது குமரமலைசாலை அருகில் அவர் சென்ற காரை நிறுத்தி குமரமலைக் கோவிலுக்கு தேங்கிக் கிடக்கும் மின் இணைப்பு வசதியை உடன் செய்து தரவேண்டும் என வேண்டிக் கொண்டார். பெருந்தலைவரவர்களும் செட்டியா ரவர்களின் ஆர்வத்தைப் பராட்டி அன்றே கோயிலுக்கு மின் இணைப்பு கிடைக்க ஆவன செய்து உதவினார்கள். இதன் பயனர்க மின்வசதிக் குழுவினரின் நீண்டநாள் விருப்பம் நிறைவேறியது. இப்போது குமரமலைக் குன்றின் மீதுள்ள ஒளிவிளக்கு குமரன் வழங்கும் அருள் ஒளியை நினைவு கூறும் வண்ணம் மெய்யன்பர்கள் நெடுந்தொலைவில் வரும் போதே மின்னொளியைக் காணும் வகை செய்துள்ளது.

மேலும் தற்பொழுது சிறப்புடன் நடைபெற்றுவரும் வை காசி விசாக நாள் படிவிழாவும்,கார்த்திகைத் திங்கள் கடைசி சோம வாரவிழாவும் தொடங்குவதற்கு காரணமாக இருந்த வரும் அவரே திரு. பிச்சை செட்டியாரவர்கள் தொடங்கி நடத்தி வந்த வைகாசி விசாகத்திருநாளை 18 ஆண்டுகளுக்கு முன் அவ்விழாவினைத் தொடர்ந்து நடத்தும் பொறுப்பை புதுக்கோட்டை ஸ்ரீசண்முகவிலாஸ் மிட்டாய்க்கடை திரு. சு. வே. மலையாண்டி சேர்வை அவர்களிடம் ஒப் படைத்தார். அதன்படி கடந்த 18 ஆண்டுகளாக 108 காவடி களுடன் படி விழாவும், சிறப்பான அபிஷேக அலங்கார ஆராதனைகளும், அன்னதானமும் மிகச்சிறப்பாக, வேலைப் பிடித்திருக்கும் அருள்மிகு சண்முகநாதனின் காலைப் பிடித் திருக்கும் திரு. சு. வே. மலையாண்டி சேர்வை அவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அதேபோன்று திரு. பிச்சை செட்டி யாரவர்களின் முயற்சியினால் முதலில் புதுக்கோட்டை நகர் வ. சு. கு. குடும்பத்தினரால் தொடங்கி நடத்தப்பட்டு வந்த கார்த்திகைத் திங்கள் கடைசி சோமவார விழாவும், அவர் களைத் தொடர்ந்து கடந்த பல ஆண்டுகளாக புதுக்கோட்டை நகர் ஜவுளி வர்த்தகப் பெருமக்களால் சிறப்பாக நடத்தப் பட்டு வருகிறது. அன்று சிறப்பான அபிஷேக அலங்காரமும்

அன்னதானமும் இரவு நாடகமும் நடத்தப்பட்டு வருகிறது. அவ்விழா அன்று புதுக்கோட்டை நகரில் உணவுவிடுதி நடத்தி வரும் புல்வயல் திரு. கருப்பையா அவர்களின் உபயத்துடன் புதுக்கோட்டை திலகவதியார் திருவருள் ஆதீனம் தவத்திரு சிவ பிருந்தாதேவி அன்னையவர்களால் படிவிழாவும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. பங்குனி உத்திர திருநாளன்று புதுக்கோட்டை நகர் சித்ரா ஜவுளி ஸ்டோர் உரிமையாளரும் கம்பன் கழகத் தலைவருமான திரு.ம. கந்தையா அவர்களால் குமரமலை சாலை வளைவுக் கருகில் தண்ணீர் பந்தல் நடத்தப்பட்டு பக்தர்களுக்கு இனிய பானங்களும் சிற்றன்னமும் வழங்கப்பட்டு வருகிறது.

1982-ம் ஆண்டு சனவரி முதல் நாள் தொடங்கி, கடந்த மூன்றாண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் ஆங்கில ஆண்டு முதல் நாளன்று புதுக்கோட்டை மாவட்ட அனைத்து அரசு அலுவலர்களால் தெய்வீகப் பேரவையின் சார்பில் படிவிழாவும் சிறப்பான அபிஷேக அலங்காரமும், அன்னதானமும் சமயச் சொற்பொழிவுகளும் நடத்தப்பட்டு வருகிறது. அனைவரது ஒத்துழைப்போடும் குமரனின் கருணையோடும் இவ்விழா ஆண்டுக்கு ஆண்டு வலிவும் பொலிவும் பெற்றுவருவது மன நிறைவு அளிக்கிறது. குமரனின் புகழ் கூறும் இந்நூலை வெளியிடுவதன் மூலம் இப்பேரவை மேலும் சிறப்புப் பெறுகிறது.

1961-ம் ஆண்டு முதல் இத்திருக்கோவில் இந்து அறநிலைய பாதுகாப்புத்துறை புதுக்கோட்டை திருக்கோயில்கள் தேவத்தான நிர்வாகத்தின் கீழ் சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகின்றது. தற்போதைய அறங்காவல் குழுத் தலைவரான திரு. எஸ். வி. எஸ். வெங்கிடாசலம் அவர்களின் சீரிய தலைமையில் திருக்கோயில்கள் நிர்வாக அலுவலர் திரு. ஏ. சேதுரத்தினம் அவர்களது நிர்வாகத்தில் திருக்கோயில் வழிபாடுகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

திருக்கோயிலுக்குச் செல்லும் சாலையின் இருமருங்கிலும் நிழலும் அழகும் தரும் மரங்கள் வளர்க்கும் பணியை வட்டாட்சியர்கள் திரு. இராஜகோபாலும் திரு. ம. மகாலிங்கமும் ஏற்றுள்ளனர்.

நாள்தோறும் கீழ்க்காணும் நேரங்களில் திருக்கோயிலில் வழிபாடு (பூசைகள்) நடைபெற்று வருகின்றன.

கால சந்தி காலை 8 முதல் 8-30 மணி வரை
உச்சிக் காலம் முற்புகல் 11-30 முதல் 12-00 மணி வரை
சாயரட்சை மாலை 5-30 முதல் 6-00 மணி வரை
அர்த்த சாமம் இரவு 7-30 முதல் 8-00 மணி வரை.

குமரமலையை அடுத்துள்ள, தற்போது புல்வயல் என வழங்கி வரும் திருப்புல் வயல் எனும் சிற்றூரில் தோன்றியவர் முத்துமீனாட்சிக் கவிராயர். இவர் இங்கு கிராம அலுவலராகப் பணியாற்றி வந்தார் எனவும் கூறப்படுகிறது. இவர் குருபாத தாசர் என்றழைக்கப்பட்ட பெரும்புலவர். குமரமலையில் கோவில் கொண்டுள்ள அருள்மிகு தண்டபாணியின்பால் அளவற்ற பக்திகொண்ட மெய்யடியார். இவர் குமரமலை தண்டபாணியின்பேரில் 100 அரிய பாடல்களை ஆசிரிய விருத்தப்பாவில் பாடிச் சிறப்பித்துள்ளார். தனது பாடல்களில் இங்கு கோவில் கொண்டுள்ள தண்டபாணியை குமரேசன் என்று அழைத்து மகிழ்ந்துள்ளார். குமரேசனின் குன்றாப் புகழ்பாடும் தனது நூலுக்கு ''குமரேச சதகம்'' எனப் பெயர் சூட்டியுள்ளார். இதன் காரணமாகவே இவ்வழகிய குன்றிற்கு குமரமலை என்றும் இங்கு எழுந்தருளியுள்ள தண்டபாணிக்கு குமரேசன் என்றும் பெயர் வழங்கியிருக்கலாமோ என எண்ணத் தோன்றுகிறது.

குமரேசப் பெருமானின் பேரில் தனக்குள்ள அளவற்ற பக்தியினால், தான் மனம் உருகி உவந்து குமரேச சதகத்தைப் பாடியதை இப்பெரும் புலவர் தனது குமரேச சதக அவையடக்கப் பாடலில்

'' ... ....... உகந்து புல்லை
வால்குமரேசர் மேற்சதகம் புகன்றனன்
மனம் பொருத் தருள்புரிகவே'' எனப்பாடியுள்ளார்.

பூமிக்கோ ராறுதலை யாய்வந்து சரவணப்
  பொய்கைதனில் விளையா டியும்
புனிதற்கு மந்திரவுப தேசமொழி சொல்லியும்
  போதனைச் சிறையில் வைத்தும்
தேமிக்க அரிகரப் பிரமாதி கட்குஞ்
  செகுக்க முடியா வசுரனைத்
தேகங் கிழித்துவடி வேலினா லிருகூறு
  செய்தமரர் சிறைத விர்த்தும்
நேமிக்கு ளன்பரிட ருற்றசமயந்தனி
  னினைக்கமுன் வந்துத வியும்
நிதமுமெய்த் துணையாய் விளங்கலா லுலகிலுனை
  நிகரான தெய்வ முண்டோ
மாமிக்க தேன்பருகு பூங்கடம் பணியுமணி
  மார்பனே வள்ளி கணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
  மலைமேவு குமரேச னே.

என்ற குமரேச சதகத்தில் முதற் பாடலில் குமரேசனின் பெருமையை, குன்றாத கருணையை உறுதியுடன் அவனடியைப் பற்றி நிற்கும் மெய்யடியார்களுக்கு உறுதுணையாய் விளங்கும் உயரிய கருணையை, அருமையாக விவரித்திருக்கிறார் குருபாத தாசர். பூமிக்கு ஆறுதல் தரவேண்டி குழந்தைக் குமரனாய் எழுந்தருளி சரவணப் பொய்கையில் விளையாடியும், தந்தைக்கு மந்திரஉபதேசம் செய்தும், பிரணவ மந்திரத்தின் பொருள் தெரியாத நான்முகனைச் சிறையில் வைத்தும், அரனும், அரியும், தேவரும் பிறரும் வெல்லமுடியாத வல்லமையுடைய சூரபதுமனைத் தன் வேலால் இருகூறாகப் பிளந்தும், பகைவனுக்கும் அருள் பாலிக்கும் பாங்கோடு, ஒரு கூறைக்கோழிக் கொடியாக்கித் தன் கரத்தில் ஏந்தியும், மறுகூறை மயிலாக்கி அதனைத் தன் வாகனமாகக் கொண்டு அதன்மீது அமர்ந்தும், தேவர்களை சிறைமீட்டு அருளியும், நேமிக்கு இடர்வந்தபோது நினைக்கு முன்னேவந்து உதவியும், இவ்வாறு நாள்தோறும் "நெஞ்சில்

ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றி'' அடியாருக்கு உற்றதுணையாக விளங்குவதால் குமரனுக்கு நிகரான தெய்வம் இப்பூவுலகில் வேறு உண்டோ! என்று கந்தனின் கருணையைக் கவிஞர் வியந்து பாடிக் களிக்கின்றார் நம்மையும் களிப்பில் ஆழ்த்துகின்றார்!

இப்பாடல் திருக்கோயிலின் மதில்சுவரில் பிரதான நுழை வாயிலின் வலதுபுறம் உள்ள கல்வெட்டில் பதிக்கப்பட்டு பக்தர்கள் பாடி மகிழ வகை செய்யப்பட்டுள்ளது பாராட்டிற் குரியது.

குமசேச சதகத்தில் உள்ள நூறு பாடல்களில் ஒவ்வொரு பாடலிலும் ஈற்றடியாக

''மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே''

என்று மயிலேறி விளையாடும் குகன், புல்வயல் அருகிலுள்ள குன்றின் மிசை குமரேசனாக எழுந்தருளி அருள் பாலிப்பதாக குருபாத தாசர் பாடி மகிழ்ந்துள்ளார். இவ்வாறு ஒவ்வொரு பாடலின் முடிவிலும் குமரேசனை நினைத்து பயன்பெற நமக்கும் வழிகாட்டியுள்ளார் இப்பெரும் புலவர்.

குமரேச சதகம் குமரனின் புகழ்பாடும் பக்திப்பாடல்கள் மட்டுமல்ல. அறநெறிகள் பலவற்றையும் விளக்கும் அரிய தொரு நீதி நூலுமாகும். அந்தணர் இயல்பு, அரசர் இயல்பு, வணிகர் இயல்பு, வேளாளர் இயல்பு, பெரியோர் இயல்பு, நல்லார் இயல்பு, புலவர் இயல்பு, பாடல் இயல்பு, உலுத்தர் இயல்பு எனப்பலரின் இயல்புகளையும் நாம் அறிந்து பயன் பெறும் வண்ணம் தம் பாடல்களில் விளக்கியுள்ளார். தத்தம் செயலால் பேயெனப்படுவோர், பதர் எனப்படுவோர், இறந் தும் இறவாதவர், இறவாதிருந்தும் இறந்தவர், சிறிதும் பயன்படாதவர், உபகாரம் இல்லாதவை, இருந்தும் பயன் படாதவை, திருத்தினும் திருந்தாதவை, சமயத்திற்கு உதவா தவை, ஆகியவற்றையும் தெளிவாக எடுத்துக் கூறி இந்

தகைய தீக்குணங்களிலிருந்தும் விடுபட வழிகாட்டியுள்ளார். தெய்வச்செயல், திருவருட் சிறப்பு, திருவாழ் இடங்கள், மூதேவி வாழும் இடங்கள், ஊழின் வலிமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, ஆகியவற்றையும் இப்புலவர் தம் பாடல்களில் விவரித்துள்ளார்.

தம்மிடம் திருவைச் சேர்க்கும், தீமையை நீக்கும் திருநீற்றை முறைப்படி தரித்து நாம் பயன்பெற வேண்டும் என்ற அருள் உள்ளத்தோடு, புனிதமான திருநீற்றை வாங்கும் முறையை இந்நூலின் 87-வது பாடலிலும், திருநீற்றைத் தரிக்கும் முறையையும் அதனால் பெறும் பயனையும் 88-வது பாடலிலும் குருபாத தாசர் சிறப்பாக விளக்கியுள்ளார். ''ஒவ்வொரு நாளும் பக்தியுடன் மந்திரத்தைச் சொல்லிக் கொண்டே பக்தியோடு திருநீறை எடுத்து திருநீறு தரையில் விழாதபடி அண்ணாந்து செவியில் தொடங்கி புருவத்தில் ஒழுகுமாறு விரல்களால் நெற்றியில் அழுந்துமாறு தரிக்க வேண்டும், அவ்வாறு திருநீற்றைத் தரித்தால் ''தீவினை எதுவும் தீண்டாது; தீங்கு வராது; உடல் தூய்மையாகவும் ஆரோக்கியமாகவும் அமையும். அவ்விடத்தில் இறைவன் தன் தேவியுடன் நீங்காமல் நின்று நித்தம் ஆனந்த நடனம் புரிவான். செல்வதிருமகள் அவன் முகத்தில் நாளெல்லாம் களிநடம் புரிவாள்'' என திருநீற்றின் பயனைத் தெளிவாக விளக்கி நாம் உய்யும் வகையை உரைத்திருக்கின்றார் இப்புலவர்.

குறைதீர்க்கும் குமரேசனின் குன்றாத கருணையைப் பெற்றுய்ய, நாள்தோறும் அவனடி நினைத்து தொழுது, அவன் திருநீற்றை நெற்றியில் அணிந்து அவனது அருள் வெள்ளத்தில் கலந்து இன்புறுவோம்!

''பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்க் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம மாவது நீறு
நேசம் புகழ்வது நீறு திருக்குமரன் திருநீறே''

என குமரனின் திருநீற்றின் மகிமையை நினைந்து வாயினிக்க உளமினிக்கப் பாடி மகிழ்வோம்!

வண்ணமயில் ஏறிவரு வேலா யுதக்கடவுள்
மலைமேல் உகந்த முருகன்
வள்ளிக் கொடிக்கினிய வேங்கைமரம் ஆகினோன்
வானவர்கள் சேனா பதி
கன்னல்மொழி உமையாள் திருப்புதல்வன் அரன்மகன்
கங்கைபெற் றருள்புத் திரன்
கணபதிக் கிளையவொரு மெய்ஞ்ஞான தேசிகக்
கடவுள் ஆவினன்குடியி னான்
பன்னரிய புல்வயலில் வாலகும ரேசர்மேல்
பரிந்துகுரு பாத தாசன்
பாங்கான தமிழாசி ரியவிருத் தத்தின் அறை
பாடலொரு நூறு அடி
நன்னயம தாகப் படித்தபேர் கேட்டபேர்
நாடொறுங் கற்ற பேர்கள்
ஞானயோ கம்பெறுவர் பதவியா வும் பெறுவர்
நன்முத்தி யும்பெறுவரே.

மண்ணில் அரியதொரு பகுதியாகிய புல்வயல் அருகில் உள்ள குமரமலையில் குடிகொண்டுள்ள குன்றாத கருணை யுடைய குமரேசப் பெருமான் மீது பரிவுடன் குருபாத தாசர் பாங்குடன் பாடியுள்ள நூறு பாடல்களையும் நாட்டமுடன் நயந்து படித்தவர்கள், கேட்டவர்கள், நாள்தோறும் கற்ற வர்கள் ஞான யோகமும், எல்லாப் பதவியும், பிறவிப் பயனாகிய வீடு பேறும் முக்தியும் பெறுவர் என இந்நூலின் 100வது பாடலில் நூற்பயனாகப் பாடி நாமெல்லாம் அத்தகைய பெறற்கரிய பெரும் பேறு பெற்றுய்ய வழிகாட்டியுள்ளார். அவர் வழி நின்று குமரேசனின் புகழ் பரப்பும் குமரேச சதகத் தின் நூறு பாடல்களையும் நாம் நாள்தோறும் கசிந்து உள முருகப்பாடி குமரேசனின் குன்றாத அருளுக்கு பாத்திரர் களாவோமாக.

# அருள்மிகு குமரமலை தண்டபாணி

# குமரேசன் பாமாலை

## விநாயகர் காப்பு

குமர மலைவாழ் குமரன் நினைவைச்
சுமந்த உளம்மகிழத் தோன்றும்—குமரேசன்
பாமாலை சாற்றிப் பணிந்தேன்வி நாயகநின்
காக்கும் கவின்மலர்தாள் காப்பு.

## நூல்

1 பழகுதற்கு தமிழ்தந்தாய் பாடுதற்கு பொருள்தந்தாய்
அழகுமயில் மீதமர்ந்து அருளைத் தந்தாய்
குழலழகு தெய்வ யானை யுடன்கூடி மகிழ்ந்திருந்து
குறவள்ளிக் கொடியவள் குரலிலும் எனை நினைந்தாய்
அழகுதமிழ் எடுத்து அருளையும் அதில் குழைத்து
உலகுய்யப் பாமாலை உவந்து நான்சூடுதற்கு
அழகுமலை குமரமலை அமர்ந்த குமரேசா
அருளை நீ குவிப்பாய்! ஆசியெனக் களிப்பாய்!

2 அருள்வருக கிருபானந்தா அன்பர்க்கு அருள் வோனே!
அழகுமயில் மீதமர்ந்து அன்புமுகம் காட்டி
பொருள்தந்து புகழ் தந்து புவியிலெமைக் காப்போனே!
பொற்சுடராய் குமரமலை மீதமர்ந்த குமரேசா!
இருள்நீக்கி எமைக்காக்கும் இளங்குமரா முருகா!
எழில் முகத்தில் ஒளிசிந்த இன்னருள் புரிவோனே
உருள்கின்ற உலகத்தைக் காக்கும் உமைமைந்தா
உன்திருப் பாதம் பற்றி உய்கின்றோம்!

3 குன்றுதோ ராடுகின்ற குமரேசன் வாழுமலை
குன்றினில் சிறந்த குமரன்மலை எங்கள் மலை!
தேவர் அடியார்குறை தீர்க்கவந் தமர்ந்தமலை
தேவர்களும் போற்றுகின்ற திருவளரும் குமரமலை!
மூவுலகோர் போற்றுகின்ற முக்திதரும் நல்லமலை
முந்தவப் பயனாய் முருகனமர்ந்த குமரமலை!
குருபாத தாசர் போற்றும் குமரேசர் வாழுமலை
குறைதீர்க்க வந்தமர்ந்த குமரமலை எங்கள் மலை!

4 பழநிக்குச் சென்றடைந்த பணிந்த பக்தன்
தளர்ந்த நிலையில் தான்பெற்ற துயரினை
உளம்கொண்டு போக்கிட உறுதி கொண்டு
உடன்வந்து தொண்டன் உறுகனவில் தோன்றி
எலுமிச்சை பிரம்புஎழில்நீறு உருத்திராட்சம்
இனங்காட்ட அடையாளமாய் இவற்றை வைத்தாய்!
அழ கொளிரும் குமரமலை குடிகொண்ட பெருமானே
அடியாரை ரட்சித்த ஆறுமுகா! குமரேசா!

5 சங்கம் புதரடியில் தானிருந்தருள் பாலித்து
சார்ந்துவரும் பக்தர்களின் சங்கடங்கள்
தீர்த்துவைத்து
எங்கும் புகழ்பெற்ற இறைவனாய் விளங்குகின்ற
எழில்குமரா சரவணனே முருகா சடாட்சரனே!
தாங்கும் அடியவர்க்கு தயக்கமின்றி உதவுகின்ற
தனிகாசலப் பெரும! தணிகமலை உறை வோனே!
மங்காப் புகழ் மேவும் மணிவிளக்கே! உலகமிசை
மாறாத் கருணையை மாரியாய்ப் பொழிவோனே!

6 உன்தொண்டில் உளம் மகிழ்ந்து உலகையே மறந்த
உண்மைத் தொண்டரின் உறுதுயர் போக்கிட
பொன்வாயை நீதிறந்து சங்கம் புதரடியில்
பொலிவோடு உள்ளசாட்சி யுரைத்திட்டாய்,
அன்னவரோ

நன்மைபெற நாங்களெல்லாம் நல்லதொரு ஆலயத்தை
நலமுடனே தொடங்கிட்டார் நற்தொண்டர்
தெய்வமகான்!
எந்நாளும் உன்னருளே எங்களுக்கு நற்றுணையாம்
எழில்மேவு தெண்டாயுதா இளைய பெருமானே!

7 அடியார்க்கு அருளுவதில் அணுவளவும் தயங்காமல்
அடியார் கோருமுன்னே அவசரமாய் வந்து
அடியவரின் குறையை அக்கணவே போக்கிவிட
அழகுமலை பழநிமலை அதனையும் துறந்து
நெடிய தூரம் என்று நினைந்தும் பாராமல்
கடிதில் வந்தமர்ந்து அவர்கனவிலும் தோன்றி
நீடுபுகழ் சங்கம் நிறைந்த புதரடியில்
அடையாளம்காட்டி அமர்ந்தவனே குமரேசா!

8 ஆறுபடை வீடமர்ந்தே அருள்பாலித்தே
அடியாரின் வினைதீர்க்கும் அய்யனே நீயும்தான்
சிறுபடை வீடெங்கள் குமரமலை வீற்றிருந்து
சிறப்புற ஆட்சிசெய்து சிறுமைகள் தீர்க்கவந்தாய்!
வறுமை போக்கவந்தாய்! வளமை சேர்க்க வந்தாய்!
வள்ளலே எங்கள் வள்ளியன்னை மணவாளா!
உறுதுணை உன்னையன்றி உற்றவர்யா ரிங்குள்ளார்?
உமையவள் மைந்தா உலகை வலம் வந்த ஐயா!

9 தந்தைக்கு உபதேசம் செய்திட்ட தலைவன் நீயே
தளிர்கொடியாள் தெய்வயானை தாள்போற்றும்
தலைவன் நீயே
சிந்தைக்கே விருந்தாகும் தமிழுக் கும் தலைவன் நீயே
சித்திரமேனிக்கும் அழகுக்கும் தலைவன் நீயே
செந்தூ ரப் பொட்டுக்கும் சேவற்கும் தலைவன் நீயே
சீர்கடம்ப மாலைக்கும் மயிலுக்கும் தலைவன் நீயே
முந்துதமிழ் மூத்ததமிழ்ச் சங்கத்தின் தலைவன் நீயே
முருகய்யா குமரமலை முதல் வா உன்கழல்போற்றி!

10 பழநிமலை உன் மலை தான் என்ற போதும்
பக்தர்களுள் பாதார விந்தம் தொட்டுன்
அழகுமுகம் கண்டபின்பே அங்கு செல்வதாலே
அடியாரைக் காத்தனுப்ப அருள் பாலிப்பாய்!
குழலழகு வள்ளிகாந்தா குறைவின்றிக் காத்துநின்றே
குடிமக்கள் குறை தீர்ப்பாய்! பக்தர் கூறும்
மழலை மொழி கேட்டாலே மயங்கிப் போவாய்
மலரடியில் அவர் விழுந்தால் மகிழ்ந்து நிற்பாய்!

11 திருச்செந்தூர் தனிலிருந்து திரும்பி வந்துன்
திருப்பாதம் பட்டதைப்போல் உள்ளதய்யா
அருட்செல்லவா குமரமலை அமர்ந்துள்ள தண்டபாணி
அன்னை உமை எப்படித்தான் மறந்துள்ளாளோ?
பொருட்செல்வம் எங்களுக்குப் பெரிதே யில்லை; உந்தன்
பொன்னடிதான் தஞ்சமய்யா; புரியாதோர் தான்
நிதம்
பொருட்செல்வம் தேடுகின்றார்; நீ இருந்தால்
பொன்பொருளா கிட்டாது தண்டபாணி!

12 முருகா என்று ஒருதரம் மொழியுமுன்னே
இருகாலும் தோன்ற எழுந்தருளும் குமரா!
உருகாத உள்ளத்தை உருகவைக்கும் முருகா!
உற்ற துணையாயிருந்து உலகாளும் கந்தா!
பெருகிவரும் கருணைப் பெருவெள்ளத்தில் ஆழ்த்தி,
பெருகிவரும் தீவினையை பெருகாமல் தடுத்து,
உருளும் கண்களிலே உருண்டு நீர் சொரிய
உன் புகழைப்பாடும் உயர் பேறுஅருள்வாய்!

13 கருணைக் கடலே கற்பகமே குமரேசா!
கந்தா என்றழைத்தால் கண்திறக்கு முன்வந்து
கருணை மழை பொழியும் கார்முகிலே தண்டபாணி!
பொருணை நதிவெள்ளம் புரண்டோடி
வந்தாற்போல்
கந்தனின் அடியார்தம் கண்கலக்கம் கண்டவுடன்
கணப்பொழுதில் ஓடிவந்து கருத்துடன்
காத்திடுவாய்!
சொந்தச் சேய்போலச் சுகமுறக் காக்குமுந்தன்
சொந்தப் பாசத்தில் சுகமெல்லாம் பெறவருள்வாய்!

14 வாடிடும் பயிருக்கு வான்மழையே குமரா!
நாடிடும் எம்முயிர்கு நற்கதி நீ அமரா!
பாடிடும் பாட்டினில் பரவி நீ நின்றிடுவாய்
நாடிடும் நலம்யாவும் நனிமிகத் தந்திடுவாய்!
கோடிப் பொன்னைக் கொட்டிக் கொடுத்தாலும்
தேடிப் பெறவேண்டும் தேவனுன் திருவருளே!
ஆடிக் காற்றினில் அலைந்திடும் சருகாகாமல்
நாடியெனைக் காத்திடுவாய் நலமெல்லாம்
சேர்ந்திடுவாய்!

15 விரும்பி அழைத்தவுடன் வேகமாய் வந்தமர் வாய்
விருப்போடு பக்தர்களைப் பாதுகாப்பாய்!
இராப்பகலாய் உன்நினைவில் இருப்பவர்க்கு
இருக்கின்றேன் அஞ்சேல் என உறுதி சொல்வாய்!
அராஜகத்தைக் கண்டாலே வேலால் மாய்ப்பாய்!
அழகுமயில் மேலமர்ந்து அகிலம் சுற்றி
இராஜியத்தை உனக்கென்றே அமைத்தவன் நீ
எப்பயமு மினி எமக்கில்லை நீ அருகிருந்தால்!

16 பரங்குன்றில் பாவையவள் தெய்வானை அன்னை
பனிமுகத்தைக் கண்டுமிக மனமகிழ்ந்து நீயும்
கரம்பற்றிக் களித்திட்ட கந்தா குமரா!
கனிகொஞ்சும் அழகர்மலை அமர்ந்திட்டோனே!
வரம் தர நீ வரவேண்டுமய்யா எங்களுக்கே யுன்
வடிவழகுத் திருமேனி காண்பதற்கே!
சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம் தணிகைச் செல்வா
சிவன்மகனே சிரஞ்சீவிக் கடவுளே நீ!

17 குன்றுதோராடும் குமரன் என்றாலும்
குமரமலை தான்உனக்கு குன்றமர் படைவீடு!
என்று வந்து தொழுதாலும் நீயும்
எழில்முகம் காட்டி இன்னருளைச் சிந்துகிறாய்!
பண்டு நான் செய்த பல் தவப்பயனால்
பாரில் சிறந்திட பரிவுடன் அருள்கின்றாய்!
ஈன்ற அன்னையிலும் ஈடில்லாப் பாசமுடன்
என்னைக் காத்து ஏற்றம் தருகின்றாய்!

18 பல்லாண்டு பாடிடுவோம் உந்தனுக்கே
பார்வதியின் பாலகனே கந்தவேலா!
சொல்லாண்டு தமிழ் நான் பாடுதற்கே
சொல்லித் தரவேண்டுமய்யா நித்தம் நித்தம்!
எல்லோரும் எல்லாமும் பெற்றுய்ய
ஏரகத்தில் உள்ளவனே அருளைத்தா நீ!
பொல்லாங்கை நீக்கி மக்கள் புதுவாழ்வு பெற்று
பொங்கிடவே அருள்வாய் நீ குமரேசா!

19 அமரர் உலகாளும் ஆறுமுகத் தய்யா
அகிலம் காக்கின்ற அழகு கந்த வேலா!
குமரமலை தனில்வாழும் குமரேசா தண்டபாணி
குன்றுதோறும் நின்றாடும் கூர்வேல் குமரா!
இமயம் தனில் வாழும் இனிய சக்தி பாலா
இதயம் குடிகொண்ட அன்புச் செல்வா!
குமரிக்கடல் அன்னை தந்தசெல்வா
குமரேசா உன்னடியைத் தொழுது நிற்பேன்!

20 திருவருளைத் தருகின்ற சிவனின் செல்வா
தீந்தமிழைக் காக்கின்ற அன்புநேசா!
பேரானே பெருமகனே பேரருளே பீடுமிக்க
பெருமைகளைப் பெற்றவனே பீடுத் திருவேரகத்தில்
குருவாகி நின்று தந்தைக்கு மந்திரத்தைக்
குணமோடு உபதேசம் செய்யத குகனே!
அருளோடு பொருளளிக்க வந்த உன்னை
அகிலத்தார் கொண்டாடல் அரிதோ சொல்வாய்?

21 எதுகையுடன் மோனையென இணைந்த பாட்டாய்
எழில் மேவும் மலைசூழ்ந்த இன்ப ஊராம்
புதுகையினில் புகழ்சேர்க்கும் குமரமலை மீதமர்ந்து
புகழ் காக்க வந்தவனே குமரேசா!
முதுமையிலும் ஏழ்மையிலும் உன்னை யன்றி
முக்திதர யாருண்டு முருகா குமரா?
எதுவரினும் நீதானே எமக்குக் காப்பு!
எந்நாளும் நீதானே ஏற்ற நிதி வைப்பு!

22 செந்தமிழைத் தந்தவனே சக்திபாலா
செந்நாவில் உன்புகழைப் பாடிநிற்க
எந்தனையே காத்திட இன்னருளை வேண்டுகின்றேன்!
எந்நாளும் உன்னருளைக் கோரி நின்றேன்!
எந்தனையே என்றும் காக்கின்ற தெய்வமாக
எண்ணித்தினம் வணங்கி வரம் வேண்டுகின்றேன்!
எந்தவினை வந்தாலும் உன்னையன்றி
எவரெமக்குத் துணைபுரிவார் கந்த வேலா!

23 சரவணனே சண்முகனே எழில் மயில் வாகனா
சடாட்சரனே திருச்செந்தில் அமர்ந்த வேலா!
அரவணைத்து ஆதரிக்க உன்னை யன்றி
அகிலத்தில் யாருண்டு? அன்பு காட்டி
நிரந்தரமாய் எமைக்காக்க வேண்டுமய்யா
நித்தியமே சத்தியமே நீலமயில் வாகனனே!
சங்கரனின் முக்கண்ணில் முகிழ்ந்த செல்வா
சுகம்தந்து எந்நாளும் காத்து நிற்பாய்!

24 பழநியம் பதிவாழ் பழநியாண்டவா
பாவ வினை போக்கும் பரமா தண்டபாணி!
பழம் கேட்டுப் பழமான பராபரனே ஞானப்
பழமாய் ஆவினத்தில் பதிந்த பாலா!
குழந்தை வடிவான குழந்தை வேலா
குறைதீர்க்கும் பழந்தனை இழந்ததால் சினந்த வா!
பழத்தின் சுவையெனப் பயன்தரும் தண்டபாணி
ஞானப் பழமாய் ஆனபின் பழம் உனக்கேன் இனி?

25 குணசீலா திருப்பரங் குன்றமர்ந்த செல்வா!
குறைதீர்க்கும் கருணைச் செந்தில் வேலா!
வினைதீர்க்கும் பழநி வேலவனே தண்டபாணி
விஞ்சைப்பொருள் விளக்கிய சுவாமிநாதா!
கனிகொஞ்சும் பழமுதிர்சோலை மேவும் செல்வா
கண்கவர் திருத்தணிகை கண்டுவக்கும் குமாரா!
அனைவருக்கும் அருமருந்தே குன்றுதோராடும் ஐயா
அகிலத்தில் உனையன்றி அரியதுணை யாருண்டு?

26 கும்பிட்டு தொழுவோரின் குறைதீர்க்கும் குமரேசா!
நம்பித் துதிப்போரின் நலம் காக்கும் தண்டபாணி!
அம்பிகை சக்தியின் அருமைந்தா அழகேசா!
எம்பிரானுக்கு உபதேசம் ஈந்த செல்வா
தும்பிக் கையோன் துணை கொண்ட தூயா!
நம்பினோரை நாளெல்லாம் காக்கும் நேயா!
உம்பர்போற்றும் உமையவள் மைந்தா
உன்னடிதொழும் என்னை உறுதியுடன் காப்பாய்!

27 வண்ண மயிலேறி வந்திடும் வடிவேலா!
வானவரும் வணங்கும் வள்ளியம்மை மணவாளா!
என்ன பிழைதன்னை ஏழையேன் செய்தாலும்
அன்பில் அன்னையாய் அமைந்திடும் அழகேசா!
சின்னமதியால் செய்திடும் பிழையெல்லாம் எந்நாளும்
அன்னையின் பாசத்தால் அகற்றிடும் அமரா!
எந்தன் உள்ளத்தில் என்றும் நிறைவாய்
என்னை ஏற்று நீ இன்னருள் புரிவாய்!

28 குமரேசா உன்னைக் காண கோயில் வந்தால்
குறையாத அருளைக் கொட்டித் தருகின்றாய்!
குமரன் உனைக் காண கூடி நின்ற அடியார்கள்
குறையாத உன்னருளில் குளிர்ந்து நிற்கின்றார்!
அமரன் உன்னடியை அன்புடன் நாடும்போது
அன்னையின் அணைப்பில் அயர்ந்திடும்
சேயானேன்!
அமரன் உன்னருளைப் பெற ஆவின் கன்றானேன்
அருளை வேண்டி நான் அயர்ந்து நின்றேன்!

29 பாலாபிஷேகம் காணப் படைத்தகண் போதாது
பன்னீரில் உன்னழகைப் பார்த்தால் பசிவராது!
சந்தனக் காப்புச் சாத்தக் கண்டால்
இந்த வுலகில் பிறந்த இனிய பயன் எய்திவிடும்!
வெள்ளை விபூதியில் நீ விளங்கக் கண்டால்
வெள்ளம்போல் உன்னருள் வேகமாய்
பாய்ந்துவிடும்!
மல்லிகை மாலையின் மணத்தைக் கண்டால்
மனதில் உன்னருள் மணந்து பொங்கும்!

30 கையில் வேலேந்தி கனிந்துவரும் குமரா
கவலை தனைப் போக்கி அருள்தனைப் பொழி
அமரா!
மெய்யன்பில் உளம்மகிழ்ந்து மிளிர்ந்திடும் அமரா
மெய்யன்பில் திளைத்து மேன்மையுறச் செய்வாய்!
அய்யனாய் உலகெங்கும் அமைந்து உயர்ந்தாய்
அய்யனுக்கும் அய்யனாய் ஆகிச் சிறந்தாய்!
தெய்வயானை வள்ளியரைத் தேவியராய்க் கொண்டாய்
தெய்வீக ஒளிவீசும் தீரனாய் அமைந்தாய்!

31 குமரா என்றழைக்கும் என்குரல் கேட்டு வருவாய்
குறைதனைப்போக்கி அருள்தனைப் பொழிவாய்
தமரென என்னைத் தாங்கிக் காத்திடுவாய்
தடையின்றி உன்னருளை தந்து அருள்புரிவாய்
எவருக்கும் கிட்டாத பேற்றினை எனக்கீந்தாய்
தவறு செய்தாலும் தமியேனைக் காப்பாய்!
கவரும் உன்னடியைக் கண்டு கொண்டேன்
கந்தனுள் சுழலடியே கதியாய்க் கொண்டேன்!

32 குமரமலை மேவும் கூர்வேல் குமரா
குறையாத அருளைக் கொடுத்திடும் அமரா!
குமரமலைக்கு கும்பிட கூட்டமாய் வந்தால்
குறைதீர்த்து இன்பத்தைக் கொட்டிக்
கொடுக்கின்றாய்!
எவரும் விரும்பும் எழில் உருவுடன் இருந்து
எவருக்கும் இன்னலை இல்லாது செய்கின்றாய்!
கவரும் உன்கண்களில் காந்தம் வைத்தாய்
கருணை வெள்ளத்தில் களிக்க வைத்தாய்!

33 ஞானப் பழம்வேண்டி ஞாலம் வலம் வந்தாய்
ஞானப்பழமாகி ஆவினத்தில் அமர்ந்தாய்!
ஞானோப தேசம் தந்தைக்கு ஈந்தாய்
ஞாலத்தில் எங்களைக் காக்க வந்தாய்!
ஞானபண்டிதன் என நற்பெயர் கொண்டாய்!
ஞாலத்தைக் காக்கும் நற்பணி கொண்டாய்!
ஞானக் கண்ணாயிருந்து நல்வழி காட்டுவாய்
நலமுடன் வாழும் நற்பேறு கூட்டுவாய்!

34 செந்தமிழ் வளர்க்கும்செல்வக் குமரா
செந்தமிழால் எனைப் பாடச் செய்தவா!
அந்தமில் புகழும் அழகும் நிறைந்தவா
எந்தனைக் காக்க இதயம் கொண்டவா!
நொந்த உள்ளத்தின் நோய்தீர் மருந்தானவா
செந்தேனிலும் இனிக்கும் சிவக்கொழுந்தானவா!
எந்த நாளுமெனைக் காக்கும் இதயம் கொண்டவா
ஏற்றமுடன் வாழ்ந்திட இன்னருள் புரிந்திடவா!

35 சுவாமி மலை உறையும் சாமி நாதனே
சகலநலம் எனக்குத் தந்தருள்பவனே!
தகப்பன் சாமியென தரணியில் நின்றவனே
தயையால் என்னையும் ஆட்கொண்டருள்பவனே!
ஆறுபடை வீடு அமர்ந்து உயர்ந்தவனே
ஆறுதல் எனக்கு அருளிக் காப்பவனே!
ஏறுமயிலேறி எங்கும் வருபவனே
ஏற்றம் தந்தென்னை ஆண்டருள்பவனே!

36 ஓரிரு முகம் இருந்தால் உலகமக்கள் அனைவரையும்
ஒருங்கே பார்த்து உதவ இயலா தென்று
ஆறுமுகம் கொண்டாய் அகிலத்தைக் கண்டாய்!
அனைவரின் துயரையும் அப்படியே உணர்ந்தாய்!
இருகண்ணால் உலகை இருந்தபடி காணாது
பன்னிரு கண்களில் பார்வைதனைச் சிந்தி
ஈராறு கரங்களால் எடுத்து வழங்கி
ஈகையில் தனக் கீடில்லையென இருக்கின்றாய்!

37 பரங்குன்றம் மீதமர்ந்த பரமசிவன் பாலா
பாசமுடன் தெய்வயானையை மணந்த மணாளா!
செந்தூர் தனில்வாழும் செந்தில் குமரா
செந்தூர வாய் வள்ளியைச் சேர்ந்த செல்வா!
பழம்கேட்டு ஆவினத்தில் பழமான தேவா
பரமனுக்கு விஞ்சை சொன்ன பதியுற்றவா!
பழமுதிர் சோலையில் பழுத்த அளகேசா
பண்டுதிருத்தணிகை பதிந்தவா போற்றி!

38 வண்ண மயிலேறி வந்திடும் தண்டபாணி
எண்ணத்தில் நீ நிறைந்தாய் ஏதுகுறை இனி!
பொன்மேனி காட்டி, புகழ்மேவும் வேல் காட்டி,
வண்ணமயில் காட்டி, வடிவழகும் காட்டி,
என்னுடனே இருக்கின்றேன் என்ற நிலை காட்டி,
எண்ணும் போதெல்லாம் எழில்உருவம்காட்டி,
கண்மணி போல எனைக் காத்திடும் குமரா
களிப்பில் மிதந்திடக் கருணை செய் அமரா!

39 குன்றுதோறும் விளையாடும் குகனே செல்வா
குமரமலை மீதமர்ந்த குமரேசா முருகா!
தொழுவோர் துயர்களையும் தூயவனே அழகா
தொழுதவுடன் ஓடிவரும் தூயவனே குமரா!
அழகுமயில் மீதமர்ந்து அகிலம் வலம் வந்தஐயா
அடியவரின் துயர்துடைக்கும் அளகேசா!
அடியவரைக் காக்கும் அருள் உள்ளம் கொண்டவா
அருள்பொங்க எம்மை ஆண்டிட நீ வா வா!

40 தண்டபாணித் தெய்வமாய் தரணியை வலம் வந்தாய்
தனிப்பெறும் பழமாக ஆவினத்தில் அமர்ந்தாய்!
வேண்டிடும் அடியாரின் வேதனை தீர்த்தாய்!
வேண்டாத தீவினையை வேரோடு சாய்த்தாய்!
தூண்டிற் புழுவாக நான் துடிப்பதை அறிவாய்
தூண்டிலை விட்டகலத் துணை நீ புரிவாய்!
ஆண்டுபலவாக உன் அடிதனைத் தொழுவதறிவாய்
ஆண்டவன் என்ற பெயரை அப்படியே காப்பாய்

41 வணங்குவோர்க்கருளும் வடிவேலா குமரா
வணங்கித் துதிசெய்தேன் வரமருள்வாய் அமரா!
கணமும் மறவேன் உன் கழலடி அறிவாய்
கணமும் மறவா தென்னைக் காத்தருள்புரிவாய்!
மனமலர் தன்னில் மலர்ந்து இருப்பாய்
மனதில் இருளை மாய்த்தருள் புரிவாய்
கனவிலும் நனவிலும் காத்தருள் புரிவாய்
கனிவான வாழ்வில் அளித்திட அருள்வாய்!

42 துதிப்ப வர்க்கருளும் தூயவனே குமரா
துதிப்போர்க்கு துன்பம் தருவதேன் அமரா !
மதித்து நான் வணங்கிடும் மகேசன் ஆனாய்
மதிப்பவரை நீஏன் மறக்கத் துணிந்தாய்?
கதிநீயே என்று கதறித் துடிப்போரைக்
காக்கா திருப்பதுன் கருணை அழகோ?
விதியினை வென்றிடும் விருப்பம் உனக்கில்லையோ?
விதியின் பிடியில் வெந்தவர் உழல்வதோ !

43 குறிஞ்சி நிலத்தின் குறைவிலாத் தலைவனானாய்
குறையாக தமிழுக்கு உறுதுளை யானாய்!
கானக் குறவள்ளியைக் காதலித்தே மனந்தாய்
காணும் தமிழ்ப் பண்பைக் காத்து நின்றாய்!
கூர்வேல் தன்னையும் கையிலேந்தி
கூவும் சேவலுடைக் கொடி ஏந்தி
ஆடிடும் மயில்தனின் மீதேறி
ஆண்டிட வருவாய் நீ எனை நாடி !

44 கையிலிருக்கும் உன்வேல் கவலைதனைப் போக்க
மெய்யில் உன்னருள் மேவித்துணையிருக்க
வெயிலில் வெந்துழலும் வெண்புழு வாகநான்
வெய்ய நோயால் வெந்து துடிக்காமல்
வேல்தனைக் கையேந்தி விரைந்துநீ வந்திடுவாய் !
வேதனை போக்கி வேண்டும் வரம் தருவாய் !
வெய்ய விதியை வேரோடு சாய்ப்பாய்
மெய்யான வாழ்வில் மேன்மையுறச் செய்வாய் !

45 விதிசெய்யும் சதியெல்லாம் மதிகொண்டு வெல்ல
கதிநீயே யென்று நான் கனவிலும் கொண்டேன்!
கதிர்வேல் துணையால் கவலைகள் தொலையுமென
கதிர்வேலன்றி வேறு கதியில்லை எனக்கொண்டேன்!
சொல்லும் சொல்லனைத்தும் என் வாழ்வில்
வெல்லும் சொல்லாய் விளங்கிட அருள்வாய் !
வெல்லும் வடிவேலே வேதனையை நாளும்
கொல்லும் வேலாய்க் குறைதீர்த் தருள்வாய் !

46 சென்ற விடமெல்லாம் சிறந்து விளங்கும்
வென்றியெள் செயலெல்லாம் வேலனுன்
செயலன்றோ
அன்றும் இன்றும் அவனியில் என்றும்
பொன்றாத் துணையாய் புவியில் கதியாய்
கன்றின் குரல்கேட்டு கனிந்திடும் தாயாய்
என்றன் குரல் கேட்டு எழுந்தோடி வருவாய் !
என்றும் உறுதுணையாய் இருந்து ஆண்டருள்வாய் !
ஏற்றம் நான்பெற இன்னருள் புரிவாய் !

47 காக்கும் குமரனாய் வந்தாயப்பா
கருணை மிகுத்தென்னைக் காத்தாயப்பா !
நோக்கும் இடமெல்லாம் நிறைந்தா யப்பா
நோக்கில் உயர்வுநீ தந்தா யப்பா !
அன்பில் அன்னையை நிகர்த்தா யப்பா
அன்பால் என்னையும் ஆண்டா யப்பா !
சின்ன மதியை சிதைத்தா யப்பா
சீர் பெருகும் சிறப்பைச் சேர்த்தா யப்பா!

48 கையில் வேலேந்தி கடிதில் வருவாயப்பா
கவலைதனைப் போக்கி காத்தருள்வாய் யப்பா !
மெய்யில் உரைத்து நீ மிளிர்வா யப்பா!
மெய்யன்பில் மிதந்திட அருள்வா யப்பா !
ஐயனாய் உலகெங்கும் அமைந்தா யப்பா
அய்யனுக்கும் ஆசானாய் ஆனாயப்பா!
தெய்வா யானை வள்ளி தேவனப்பா !
தெய்வீக ஒளிவீசும் தீரனப்பா !

49 செந்தில் குமரா சீக்கிரம் வருவாய்
சிந்தை மகிழவரம் தந்தருள் புரிவாய்!
எந்தையும் தாயும் எல்லாம் நீயே
எந்த நிலையிலும் என்னைநீ காப்பாயே!
வந்தனை செய்வோரை வாழ வைப்பவனே
வெந்த உள்ளத்தில் வேதனை தீர்ப்பவனே !
கந்தா என்றழைத்ததும் கருணை பொழிபவனே
கருணையில் மாரியாய் கனிந்திருப்பவனே !

50 வேண்டும் வரமெல்லாம் விரைந்தருளும் வேலவனே!
வேதனை யெல்லாம் வேரோடு சாய்ப்பவனே!
வேண்டிடும் அடியாரின் வேதனை களைபவனே!
வேண்டிடும் எனக்குமட்டும் வேதனை
தருவதென்னே?
அண்டிடும் அடியாரை அணைத்துக் காப்பவனே!
அண்டிடும் என்னை மட்டும் ஆதரிக்கா ததென்னே?
மூண்டிடும் தீவினையென பொழிந்திடு வாயோ?
மூண்டிடும் தீவினையின் முதலைநீ அறியாயோ?

51 திருக்கோலம் காண நான் தேடி வந்தேன்
திருவுருவைக் கண்டு திகைத்து நின்றேன்!
அருளொளி என்னை ஆண்டிடக் கண்டேன்
அருளில் மிதந்து நான் அயர்ந்து நின்றேன்!
கவரும் கண்களைக் கண்டு நின்றேன்!
கருணை வெள்ளத்தில் கலந்துநின்றேன்!
யாருக்கும் கிட்டாத இப்பேறு பெற்றேன்
இப்பிறவிப் பயனை எளிதில் பெற்றேன்!

52 பாடிடும் பாட்டினில் பரவி நின்றிடுவாய்
தேடியழைத்தவுடன் தேடிவந்தெனை அடைவாய்!
ஆடிடும் மயிலேறி அருகினில் வந்திடுவாய்
நாடிடும் நலமெலாம் நனிமிகத் தந்திடுவாய்!
பாடித் தொழும்போது பாசத்தை குவிப்பாய்
நாடியெனைக் காக்க நலமுடன் வந்திடுவாய்!
வடிவேலும் மயிலும் வழிக்குத் துணையாகி
வாழ்வில் சிறந்திட வரந்தந் தருள்வாய்!

53 நல்லோரைக் காக்கும் நாயகனே குமரா!
நான் வணங்கும் நற்பழமே அமரா!
நல்லவை சேர்த்திடுவாய்! நாளும் வாழ்வில்
அல்லவை அகன்றிட அருள்நீ புரிவாய்!
சொல்லும் சொல்லனைத்தும் எந்தன் வாழ்வில்
வெல்லும் சொல்லாய் விளங்கிட அருள்வாய்!
எல்லோரும் புவியில் இன்புற்று வாழ்ந்திடும்
நல்லவரம் தருவாய் நாளும் காத்திடுவாய்!

54 குன்றுருவும் கூர்வேல் தனையுடையான்
கூவும் சேவற் கொடியுடையான்
மன்பதைக் காக்கும் வண்ண மயிலுடையான்,
மலைதனில் வாழ்ந்திட மகிழ்ந்திடுவான்!
அவனிக்குத் தலைவன் அவன் தந்தை
அவனுக் கே ஆசான் என் தந்தை!
அருளில் இங்கு அவனுக்கு ஈடேது?
அவனடி பணிந்தால் அச்சம் நமக்கேது?

55 வேலேந்தி மயிலேறி விரும்பியவுடன் வந்தருளி
வேண்டியவரம் தரும் வேலாஉன் துணையிருக்க
காலமெலாம் கண்ணீரில் கரைந்து தவிப்பதற்கு
கந்தா உன் கருணை உள்ளம் கருதியதேன்?
காலனையும் வெல்லும் கதிர்வேல் துணை இருக்க,
காலத்தின் பிடியில் கருகுவது அழகாமோ?
வேலேந்தி மயிலேறி விரைந்துநீ வந்திடுவாய்!
வேதனைபோக்கி வேகமாய்க் காத்திடுவாய்!

56 வடிவழகைக் கண்டால் வாட்டம் நீங்கிவிடும்!
கடிவேலைக் கண்டால் கலக்கம் பறந்துவிடும்!
ஆடுமயில் அருகிருந்தால் அச்சம் தொலைந்து விடும்!
அணிசேவல் கொடிகண்டால் அயர்வு நீங்கிவிடும்!
கந்தன் உன் கருணை முகம் கண்டால்
காலபயம் மாறிவிடும் கனிவு வந்துவிடும்!
சிந்தையில் நீ புகுந்தால் சிறுமைகள் தொலைந்துவிடும்!
செல்வம் குவிந்துவிடும் செழிப்பும் மிஞ்சிவிடும்!

57 வேலவன் தாளினையே விரும்பித் தொழுமென்னை
கோள்வந்து என்செய்யும்? கூற்றுதான்
என்செய்யும்?
நாள்தான் என்செய்யும்? நலியும் வினை என்செய்யும்?
கொடிய வினைகள்தான் என் செய்யும்?
அழியும் உடலை அழியாமல் காப்பதற்கு
அழகனுன் தாளின்றி அரியதுணை யாருண்டு?
விழியில் நீர் சொறிய வேண்டிப் பணிந்தேன்!
அழிவைத் தடுத்திடுவாய்! அமரநிலை
தந்தருள்வாய்!

58 வேலைப் பிடித்திருக்கும் வேலவா உன் காலை
வேண்டிநான் வேகமாய்ப் பிடித்தேன்!
வேலைக் கையேந்தி வேகமாய் வந்திடுவாய்
வேதனை போக்கி விரும்பியதைத் தந்திடுவாய்!
நாளில் ஒருதரம் உன் நற்றாளிணை நினைந்தேன்
நாளெல்லாம் காத்திடுவாய் நல்லவரம் தருவாய்!
வேலைத் தொழுவதையே வேலையாய்க் கொண்டேன்!
வேதனை தீர்க்கும் வேலையை நீ செய்வாய்!

59. குமரமலைக் குமரேசனைக் குன்றாடும் வேலவனை,
குறையாத கருணை குவித்திடும் கந்தனை,
அன்னை சத்தியின் அருமை மைந்தனை,
எண்ணியவுடன் வந்து ஏற்றம் தருபவனை
அரனின் மைந்தனை, அழகுமயில் வாகனனை,
அடியில் விழுந்தவுடன் அள்ளி அணைப்பவனை,
சீரடியைப் பிடித்தால் சித்தம் குளிர்பவனை
சிந்தையில் நினைத்தேன்! சிறப்பில் உயர்ந்தேன்!

60 ஒருகால் முருகனை உள்ளத்தில் நினைந்தால்
இருகாலும் தோன்றி இன்பம் பொழிவான்!
முருகா என்றொருதரம் முன்வந்து மொழிந்தால்
முன்னின்று காத்து முத்தியும் தருவான்!
அருகாத அருளை அடைய வேண்டின்,
அவனடி பற்றுவதே அரிய வழியாகும்!
பெறற்கரிய பெரும்பேறு பெற்றிட வேண்டின்,
பெம்மான் அவனடியைப் பிடித்திட வேண்டும்!



54 குன்றுருவும் கூர்வேல் தனையுடையான்
கூவும் சேவற் கொடியுடையான்
மன்பதைக் காக்கும் வண்ண மயிலுடையான்,
மலைதனில் வாழ்ந்திட மகிழ்ந்திடுவான்!
அவனிக்குத் தலைவன் அவன் தந்தை
அவனுக் கே ஆசான் என் தந்தை!
அருளில் இங்கு அவனுக்கு ஈடேது?
அவனடி பணிந்தால் அச்சம் நமக்கேது?

55 வேலேந்தி மயிலேறி விரும்பியவுடன் வந்தருளி
வேண்டியவரம் தரும் வேலாஉன் துணையிருக்க.
காலமெலாம் கண்ணீரில் கரைந்து தவிப்பதற்கு
கந்தா உன் கருணை உள்ளம் கருதியதேன்?
காலனையும் வெல்லும் கதிர்வேல் துணை இருக்க,
காலத்தின் பிடியில் கருகுவது அழகாமோ?
வேலேந்தி மயிலேறி விரைந்துநீ வந்திடுவாய்!
வேதனைபோக்கி வேகமாய்க் காத்திடுவாய்!

56 வடிவழகைக் கண்டால் வாட்டம் நீங்கிவிடும்!
கடிவேலைக் கண்டால் கலக்கம் பறந்துவிடும்!
ஆடுமயில் அருகிருந்தால் அச்சம் தொலைந்து விடும்!
அணிசேவல் கொடிகண்டால் அயர்வு நீங்கிவிடும்!
கந்தன் உன் கருணை முகம் கண்டால்
காலபயம் மாறிவிடும் கனிவு வந்துவிடும்!
சிந்தையில் நீ புகுந்தால் சிறுமைகள் தொலைந்துவிடும்!
செல்வம் குவிந்துவிடும் செழிப்பும் மிஞ்சிவிடும்!

57 வேலவன் தாளினையே விரும்பித் தொழுமென்னை
கோள்வந்து என்செய்யும்? கூற்றுதான்
என்செய்யும்?
நாள்தான் என்செய்யும்? நலியும் வினை என்செய்யும்?
கொடிய வினைகள்தான் என் செய்யும்?
அழியும் உடலை அழியாமல் காப்பதற்கு
அழகனுன் தாளின்றி அரியதுணை யாருண்டு?
விழியில் நீர் சொறிய வேண்டிப் பணிந்தேன்!
அழிவைத் தடுத்திடுவாய்! அமரநிலை
தந்தருள்வாய்!

58 வேலைப் பிடித்திருக்கும் வேலவா உன் காலை
வேண்டிநான் வேகமாய்ப் பிடித்தேன்!
வேலைக் கையேந்தி வேகமாய் வந்திடுவாய்
வேதனை போக்கி விரும்பியதைத் தந்திடுவாய்!
நாளில் ஒருதரம் உன் நற்றாளிணை நினைந்தேன்
நாளெல்லாம் காத்திடுவாய் நல்லவரம் தருவாய்!
வேலைத் தொழுவதையே வேலையாய்க் கொண்டேன்!
வேதனை தீர்க்கும் வேலையை நீ செய்வாய்!

59. குமரமலைக் குமரேசனைக் குன்றாடும் வேலவனை,
குறையாத கருணை குவித்திடும் கந்தனை,
அன்னை சத்தியின் அருமை மைந்தனை,
எண்ணியவுடன் வந்து ஏற்றம் தருபவனை
அரனின் மைந்தனை, அழகுமயில் வாகனனை,
அடியில் விழுந்தவுடன் அள்ளி அணைப்பவனை,
சீரடியைப் பிடித்தால் சித்தம் குளிர்பவனை
சிந்தையில் நினைத்தேன்! சிறப்பில் உயர்ந்தேன்!

60 ஒருகால் முருகனை உள்ளத்தில் நினைந்தால்
இருகாலும் தோன்றி இன்பம் பொழிவான்!
முருகா என்றொருதரம் முன்வந்து மொழிந்தால்
முன்னின்று காத்து முத்தியும் தருவான்!
அருகாத அருளை அடைய வேண்டின்,
அவனடி பற்றுவதே அரிய வழியாகும்!
பெறற்கரிய பெரும்பேறு பெற்றிட வேண்டின்,
பெம்மான் அவனடியைப் பிடித்திட வேண்டும்!



# கந்தபுராணம்

கொடுமைசெய் சூரனைக் கூண்டோடு அழிக்க
சிவனிடம் தேவர்கள் சென்று முறையிட,
கோபக் கனலைந்தை நெற்றிக்கண் கொப்பளிக்க.
சக்தியின் முகத்திருந்து சக்திப்பொறி தான் கிளம்ப,
தீப்பொறிகள் ஆறினையும் தீக்கடவுள் ஏற்று,
வாயுவிடம் சரவணத்தில் வைக்கச் சிவனார் ஆணையிட,
அவ்வாறு அடைந்தவுடன் ஆறு குழந்தைகளும்
ஆறு தாமரை அழகுமலர் தன்னில்
அருமைச் செல்வங்களாகி அமர்ந்து இருந்தார்கள்.
சிவனார் தன்சக்திக்கு சென்றதைக் காட்ட,
அன்னையவள் குழந்தைகள் ஆறினையும் அணைத்து
ஆசையுடன் முத்தமிட்டு அகத்தில் மகிழ்ந்து,
ஆறுமுகமும் அழகுகரங்கள் பத்தோடிரண்டும்
சேர்ந்து இருக்கும் சிறப்பைக் கண்டுவந்து
கந்தனெனப் பெயரிட்டுக் களிப்பில் மிதந்தாள்!
ஆறு குழந்தைகளை அருமையாய் வளர்க்க,
ஆறு கார்த்திகை அழகுக் கன்னியரை
கருணையுடன் சிவன் படைத்தார்; காக்கும் வகைசெய்தார்,
சக்தியின் தோழியர் நவசக்தி கன்னியர்
நவரத்ன கன்னியரெனநற்பெயர் கொண்டார்,
சூலுற்று நவவீரர்களைச் சுகமுடன் பெற்றெடுத்து,
கந்தனுக்கு உறுதுணையாய் கடமை செய்யவைத்தார்.
சிவனார் தன்சக்தி தேவி உடனிருக்க,
கணப்தியும் கந்தனும் களித்து அருகிருக்க,
மாங்கனி ஒன்றினை நாரதர் மகிழ்ந்தளிக்க,
கனிதான் தனக்கென்று கணபதியும் கந்தனும்
கனிவுடன் கேட்டு காத்து நின்றிருக்க,
ஞாலத்தை வலம் வருபவர்க்கே நற்கனி என்று
ஞாலமுதல்வன் நல்ல முடிவு சொல்ல,
ஞானபண்டிதன் முருகன் ஞாலத்தைச் சுற்ற

நீலமயில் மீதேறி நெடுந்தூரம் சென்றுவிட,
நாரதரின் கண்ணசைவை நன்குணர்ந்த கணபதியும்
அம்மையையும் அப்பனையும் அவசரமாய் வலம் வந்து,
அம்மையும் அப்பனுந்தான் அகிலம் என்பதனால்,
அகிலத்தை வலம் வந்த அர்த்தத்தைப் புரிந்து
கனியைச் சிவன் கணபதிக்குக் கனிவுடன் ஈந்துவிட,
ஞாலத்தை வலம்வந்த ஞானப்பழம் முருகன்,
கணபதியின் கையில் கனியிருப்பதைக் கண்டு,
கடுங்கோபங் கொண்டு கடிதில் துறந்தான்.
ஆடையணிகள் அத்தனையும் அவசரமாய் விட்டெறிந்தான்;
பெற்றோரைப் பிரிந்து பொதிகைமலை தானடைந்தான்.
சினம்தணிக்க உமையவள் தீம்பழமே நீ எனவே,
கனிந்தமனக் குமரனுமே பழம்நீயாய் கருணையுற்றான்!
பழந்தனை இழந்ததால் ஞானப்பழமாய் அமைந்தான்!
சினம் தீர்த்து முருகனைச் சேர்த்து வைத்து,
கைலையில் சிவன்சக்தி களிப்புடன் அமர்ந்திருக்க,
தேவர்கள் வணக்கம் செலுத்திச் செல்ல,
வணங்காமல் நான்முகன் வரிதே செல்ல,
சினமுற்ற கந்தனவன் செருக்கடக்க எண்ணி
படைப்பத்தொழில் புரியும் பிரம்மனை அருகழைத்து,
பிரணவத்தின் உண்மைப் பொருளதனைக் கேட்க,
பொருள் தெரியாது பிரம்மன் வெட்கமுற,
குட்டிப் பிரம்மனைக் குமரன் சிறையிலிட்டான்.
படைப்புத்தொழில் தடைபட்டதென்று சொல்லி,
தேவர்களும் அரியும் சிவனிடம் முறையிட
சிவன் ஞானக்கண்ணால் செயலை உணர்ந்தார்!
படைப்புத் தொழிலுக்கு பங்கம் வராமல்
முருகன் தானே முன்னின்று குறைவின்றி
நான்முகன் பணிநலமுறச் செய்தல் கண்டார்.
பிரம்மனைச் சிறைமீட்கப் பெருவிருப்பம் கொண்டு,
சிவனார் முருகனைச் சென்று அடைந்து,
உண்மைப் பிரணவத்தின் உறுபொருள் கேட்க,
தந்தையைச் சீடராக்கி தானே குருவாகி

சுவாமி மலையில் சுவாமிநாத னாய்அமர்ந்து,
சிவனே பிரணவம் எனச்சீருடன் உரைத்தார்.
நாரதர் செய்த நல்வேள்வி தன்னில்
ஆட்டுக்கிடாவொன்று ஆங்கே தோன்றி,
அகில உலகத்தை அச்சுறுத்தி ஆட்டுவிக்க,
அதனை அடக்கி அழிவைத் தடுக்க,
தேவர்கள் முருகனிடம் தெண்டனிட்டுச் சொல்ல,
முருகன் ஆணையை முன்னின்று செயலாக்கி,
வீரபாகு தேவர் வேகமுடன் அடக்கி வர,
முருகனதன் மீதமர்ந்து முன் செறுக்கை அழித்து,
மேட வாகனராய் மேதினியில் காட்சிதந்தான்!
தேவர்க்கு சூரபதுமன் செய்யும் கொடுமைகளை,
தேவேந்திரன் பயந்து சென்றறொழிந்த கதை சொல்லி
தேவர்குறை தீர்க்கத் தேவனிடம் வேண்ட,
நம்சக்தி இன்றிநாளும் அழிவில்லையென,
தவத்திற்கு மெச்சித் தந்தவர மெனச் சொல்லி,
நம்சக்தி முருகன் நல்லபடி யிதைமுடிப்பான்
இந்திரனுக் கரசை ஈட்டிக் கொடுப்பானென,
வணங்கிய தேவருக்கு வரம்தந்து அமைந்தான்.
சிவனும் சக்தியும் சேர்ந்து முருகனிடம்
இப்பணி முடிக்க இதமுடன் சொல்லி,
ஆறுமுகப் பெருமானின் ஆறிரு கரங்களில்
சிவனார் கொண்ட சீர்ருத்ரா வதாரத்தின்
ஆயுதங்கள் பத்தொன்றை அன்புடன் கொடுத்தனுப்ப,
அன்னை சக்தியும் அதிசக்தி வேலதனை
தன்சக்தியாக வேலனுக்குத் தந்து உடனனுப்ப,
சிவசக்தி சண்முகமாய் சிறந்து காட்சி தர,
நவ வீரர்களும் உடன் நற்றுணையாய்ச் செல்ல,
வாயுபகவான் வாய்த்த சாரதியாய்
இந்திரன் மயிலாக இருந்து துணைபுரிய,
அக்னி தேவன் அழகுவேல் கொடியாக,
இத்தனை பரிவாரமும் இணைந்து செல்ல,
தாரகர் சூரர் தடுக்கும் (கிரவுஞ்ச) மலையை,

தன்வேலால் பிளந்து தனிவலிமை காட்டி;
திருச்செந்தூரில் படை வீட்டில் திருவாய் அமைந்தான்.
கருணையுள்ள கந்தன், கருணையைச் சூரனுக்கும்
காட்ட எண்ணி, கருணை சுரக்க
வீரபாகுவை அழைத்து விடுதி கொடுமைகளை
விட்டுவிடு தேவர்களை, என்று சொல்லி
வீரபாகுவைத் தூதாய் விரும்பி அனுப்பியும்,
அழிவு நெருங்குவதை அறியாத சூரன்,
சினந்து முருகனைச் சிறுவன் எனப் புகன்றான்;
தன்கொடுமை தவிர்க்கத் தான் இணங்க மறுத்தான்.
கந்தன் போருக்குக் கடிதில் புறப்பட்டான்;
கதிர்காமத்தில் படைவீடு கருதி அமைத்திட்டான்;
ஒரு நொடியில் சூரனை ஒழித்தும் விட்டான்.
உடன் வந்த படைகளையும் ஒருங்கே அழித்தான்.
மாயமாய்ச் சூரன் மாமரமாகி நிற்க,
பகைவனுக்கும் அருளும் பண்பை நிலைநாட்ட,
அவனுடைய வேண்டுதலை அப்படியே ஏற்று,
மாவலிமை வேலால் மாமரத்தைப் பிளந்து,
ஒருகூறை உலகோர் உணர்ந்து போற்ற
கோழி யாக்கிக் கொடியில் வைத்தான்!
மறுகூறை எப்போதும் மாயையை அடக்கி வைக்க,
மயிலாக்கி யதன்மீதமர்ந்து மகிழ்ந்து நின்றான்!
தேவர்கள் குறைதனைத் தீர்த்தும் வைத்தான்!
இழந்த பதவியை இந்திரனுக்கு ஈந்தான்.
பஞ்சலிங்க பூசையைப் பக்குவமாய்ச் செய்து,
திருச்செந்தூரில் பெருமையைச் சேர்த்து வைத்தான்!
பெற்றோரின் ஆசியைப் பெரிதும் பெற்றான்,
தேவருக்குச் செய்த சிறப்பை எண்ணி,
இந்திரன் கொடுத்த இனிய அவன் மகளைத்
திருப்பரங் குன்றத்தில் தெய்வானையைத்
திருமணம் செய்து திருவாய் அமைந்தான்!
தேனும் திணைமாவும் தெவிட்டாது தந்த
வள்ளிக் கொடியை மணம்புரிந்து கொண்டான்!

திருத்தணிகை மலையில் திருவாய் அமைந்தான்!
ஆனைதன் அணங்கோடும் அழகுவள்ளி யொடும்
பழமுதிர் சோலையில் பழமென அமைந்து
கனிவுடன் காண்பவர்க்கு காட்சி தருகின்றான்!

---

கந்தனடி தொழுவோர்க்கு கந்தனின்றித் துணையுயார்?
உற்றதுயர் போக்க உறுதுணை வேறு யாரு?
பகைவனுக்கும் அருளும் பண்புடைய குமரன்
திருவடியைப் பற்றினால் தீய்ந்தொழியும் தீவினையே!

நெஞ்சில் குமரனை ஒருகால் நினைந்தால்
இருகாலும் தோன்றி இன்பம் கூடும்!
நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்து உருகும்!
பஞ்சமில்லா வாழ்வு பற்றிப் பெருகும்!

## மங்களம்

ஆறிரு தடந்தோள் வாழ்க!
அறுமுகம் வாழ்க! வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க!
குக்குடம் வாழ்க! செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க!
யானைதன் அணங்கு வாழ்க!
மாறிலா வள்ளி வாழ்க!
வாழ்க சீர் அடியார் எல்லாம்!

# படை விட்டோன் பதம் போற்றி

திருப்பரங் குன்றத்தில் திருமணம் கொண்டவனே
கருப்பொருள் வேதத்தின் கரைநீயே கதிர்வேலா!
விருப்புடன் தொழுவார்க்கு வினைமுற்றும் களைவாய் நீ
நெருப்பெனப் பகைக்காவாய் நிர்மலனே சக்திபாலா!

வந்தீவினை தனைநீக்கி வன்நெஞ்சம் தனையழிக்க
செந்தூரில வேலெடுத்துச் சினங்கொண்டு போராடி
இந்திரனின் திருக்குமரி தெய்வயானை தனைமணந்து
மந்தகாசப் பொலிவோடு சீரலைவாய் காப்பவனே!

பாவியேன் துயர்களைந்துன் பதமலரைப் பற்றுதற்கு
ஆவினன் குடிதன்னில் அமர்ந்தருளும் தண்டபாணி!
நாவினால் உனைநானும் நாள்தோறும் துதித்தேத்தி
பூவினால் அர்ச்சித்தேன் புண்ணியா அருள்தாராய்!

வண்ணமயில் வாகனனே வடிவழகின் வரலாறே
எண்ணமெலாம் நிறைந்தவனே ஏரகத்தே அப்பனுக்கு
கண்ணெனவே ஓங்காரக் கருப்பொருளை உபதேசித்த
பண்ணமுதே பரம்பொருளே பார்வதியாள் பாலகனே!

பழமுதிர் சோலைஉந்தன் படைவீட்டைத் தேடிவந்தால்
அழகனே ஆறுமுகத்தய்யனே அமரர் கோவே!
மழலையில் நானுரைக்கும் மனக்குறை கேட்டு இந்தக்
குழவியின் குறைகளைவாய் குமரனே குறிஞ்சிப் பூவே!

தணிகையில் வள்ளியம்மை தெய்வானை தம்மோடு
அணிசெய்து ஆட்சிசெய்து அடியார்க்கு அருள்பாலிக்கும்
பணியினில் மகிழ்வெய்தும் பரம்பொருளே வெற்றிவேலா!
துணிவுடன் பணிவும்கொண்டும் தூயடிசரணம் கொண்டேன்!

விருதுகளும் வரவேற்பும் வேண்டுமட்டும் பெறுதற்கோ
மருதமலை நின்றருளி மலர்க்கரத்தால் ஆசிகூறும்
பெருமையினை நினைத்தாலே பெருமகிழ்வு மனமெய்தும்
திருமாலின் மருகோனே தெய்வசிகா மணி நீயே!

கழுகுமலைக் கந்தனைக் கண்டாலே கலிநீங்கும்
மெழுகெனவே பக்தரெலாம் உருகிடுவார் பக்தியினால்!
கொழுகொம்பு கடம்பனன்றி குவலயத்திற்கு யாருண்டு?
பழுதின்றி வணங்கிடுவோம் பகலிரவு பாராமல்!

இமயமலை தொட்டிந்த இந்தியக் கண்டமுற்றும்
உம்பதுமலை அத்தனையும் உனக்கேற்ற படைவீடு!
எமக்கிதெலாம் போதாதென் றெண்ணியதால் புதுகையினில்
குமரமலை அரசமலை தேனிமலை தனிலும்நின்றாய்!

குன்றிருக்கும் இடமெல்லாம் குமரனுக்கே கோவிலாக
என்றெங்கள் சக்திஅன்னை ஏற்புறவே வாழ்த்துரைக்க
நின்றெங்கும் நிறைகின்றாய் நிர்மலனே சரவணனே!
முன்றினில் சேயாக முரசொலிப்பாய் கைகொட்டி!

நீயில்லா இல்லமேது! நினைவேது உனைவிட்டால்?
சேயாகி முற்றத்தில் சேவலுடன் விளையாடி
தாயாகிக் காப்பவனே தயாபரனே சண்முகனே!
தூயமன அடியாரின் துயர்களையும் பழநியப்பா!

வேலவனை வினைதீர்க்கும் வித்தகனை வேடுவனை
பாலகனை பன்னிருகை கொண்டவனை பரம்பொருளை
ஞாலமுற்றும் காப்பவனை ஞானத்தின் அருள்வடிவை
காலமெலாம் போற்றிடவே கலிநீங்கி ஒளிஓங்கும்!

குமரமலை பாமாலை

## அருளாளர்கள் மற்றும் அறிஞர்கள் மதிப்பீடு

ஸ்ரீஸத்குரு ஸதாசிவ ப்ரமேந்திர ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகள் அதிஷ்டானம்

*கீழ 7ம் வீதி,* புதுக்கோட்டை - 622 001 *(தமிழ்நாடு)*

*தேதி : 9-5-84*

### ஸ்ரீமத்ஸத்குரு ஸாந்தானந்த ஸ்வாமிகளவர்களின் அருளாசிச் செய்திகள் :

அன்னை புவனேஸ்வரியின் பேரில் நீண்டகாலமாக பல பாடல்களை எழுதி அன்னையின் சந்நதியில் பாடி மகிழ்ந்து வரும் கவிஞர் சா. ஸ்ரீநிவாசன் ஸ்ரீ புவனேஸ்வரி மாதாவின் மெய்யன்பர்களில் ஒருவர்.

குருபாததாசர் குமரேச சதகம் என்ற பாமாலை சூட்டிப் போற்றிய குமரமலை குமரேசனுக்கு, அவர் 60 விருத்த பாக்களைக் கொண்டு தொகுக்கப்பட்ட, குமரேசன் பேரில் உள்ள அளவு கடந்த பக்தி காரணமாக, அற்புதமான பாமாலையை சூடி மகிழ்ந்திருக்கிருர். அவரது இத்திருத் தொண்டு போற்றுதற்குரியது. அவர் இதுபோன்ற தெய்வ மணம் கமழும் அருட் பாடல்களை மேலும் மேலும் எழுதி அருட்கவியாகத் திகழ அன்னை ஸ்ரீ புவனேஸ்வரி அருள்புரிய வாழ்த்துகிறேன்.

சுவாமி சாந்தானந்தர்

தவத்திரு ஸ்ரீலஸ்ரீ காட்டுசுவாமிகள், அகஸ்தியர் ஆஸ்ரமம்
சின்னத்தடாகம் (போஸ்ட்) பெரியதடாகம்,
*கோயம்பத்தூர் – 641 108.*

*தேதி : 23 - 1 - 84.*

அன்பும் பண்பும் நிறைந்த சா. சீனிவாசன் அவர்களுக்கு,

நீங்கள் அனுப்பிய குமரமலை தலவரலாறு பாமாலை புத்தகம் கிடைக்கப் பெற்றேன். விவரம் அறிந்தேன். மிக்க மகிழ்ச்சி.

எல்லாம் வல்ல இறைவன் அருளால் மேன்மேலும் சிறந்த தொண்டாற்ற ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்,

இப்படிக்கு
(ஒம்) காட்டுசுவாமிகள்.

## திலகவதியார் திருவருள் ஆதினம்

பாமாலைக்கோர் பூமாலை
டாக்டர் தவத்திரு சாயிமாதா சிவபிருந்தாதேவி
அவர்கள், திலகவதியார் திருவருள் ஆதினம்
தலைவர் : உலக இந்து மகளிர் பேரவை,
புதுக்கோட்டை - 622001.

அன்புப் புதல்வர், அருட்கவிஞர், சாமி. சீனிவாசன் அவர்கள் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியாளர் அலுவலத்திலே தலைமை மேலாளர். இவர் படிப்படியாகத் தம்முடைய அறிவு, ஆற்றல் இவைகளால் பதவி உயர்வு பெற்றவர். மேலும் பெறக்கூடியவர்.

இப்போது நாம் காணும் சீனிவாசன், உத்யோகஸ்தர் மட்டுமல்ல; ஒரு உயர்ந்த, சிறந்த, மேம்பட்ட கவிஞர் சீனிவாசனை-அவரது கவிதைகளைக் கண்டு, உண்டு பாராட்டும் வகையில் அவர் எழுதிய குமரமலை தல வரலாறு பாமாலைக்கு ஓர் பூமாலை சூட்டப்போகிறோம்.

இதனை வெளியிட்டவர்கள், புதுக்கோட்டையில் ஆன்மீகப்பணிகளுக்கு அச்சானியாக இருக்கின்ற தெய்வீகப் பேரவையினராம். ஆங்கிலப்புத்தாண்டு தினத்தன்று அவர்கள், குமரமலைக்குச் செய்கின்ற . திருத்தொண்டினை இம்மாவட்டம் என்றுமே மறக்காது.

திருக்குமரனை அர்ச்சிக்கும்போது, ''ஓம் குமராய நமஹ'' என்கின்றனர். கு-என்றால் இருள், ரு-என்றால் அழிப்பது; இருளை அழித்து, ஒளியை அருள்பவன் குமரன். குன்றுதோறாடும் குமரனைப் பற்றி நம் கவிஞர், ''பழகு தற்குத் தமிழ் தந்தாய்-பாடுதற்கு பொருள் தந்தாய்'' என்று இசைக்கிறார். தமிழ் இனியது, இனிமையைக் கைக் கொண்டவர்கள் அந்த இனிய தமிழால், நல்லோர் பலரிடம் நயமாய்ப் பழக முடியும். அது கருதியே, பழகுதற்குத் தமிழ் தந்தாய் என்றும், அதனைப் பாடுதற்குரிய பொருளும் அருளும் அவனிடமிருந்தே பெறப்பெற்றன என்பதையும் முதல்வரியிலே தந்து, கந்தனை நமக்குச் சொந்தமாக்கு கிறார்-அருட்கவிஞர்.

அந்த அருளை நீ எல்லோருக்கும் கொடுத்துக்கொண்டே இருக்கிறாய், கொடு, நன்றாகக்கொடு. ஆனால் எனக்குஉன் ஆசி மட்டும் போதும். என்னே அருமை- எவ்வளவு எளிமை!

''அருளை நீ குவிப்பாய் - ஆசி எனக்களிப்பாய்''
அறுபது பாமாலைகளிளே இது ஒரு பூமாலை
அப்பூமாலையிலே உள்ள மலர்களிலே இரு
வரிகளைக்கொண்ட
இருமலர்களை மட்டும் நாம் துய்த்தோம்.

மற்றப் பூமாலைகள், அனைத்தையும் அதன் மணத்தையும் நாம் நுகரப்புகுந்தால், பாமாலையைவிடப் பூமாலை விரிவாகிவிடுமென அஞ்சி நீங்களே பாமாலைக்குள் புகுந்து, ஒவ்வொரு மலராக அமர்ந்து அதிலே உள்ள தேனினை உண்டு, திகட்டாத இன்பம் பெறத்திலகவதியார் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

வாழ்க அருட்கவிஞர்!

வளர்க, அவர்தம் அருட்பாக்களை படிப்போர்

நல்லாசியுடன்.

சாயிமாதா. சிவ. பிருந்தாதேவி.

(திலகவதியார் திருவடிப்பொடி)

## திரு. கு. ஆளுடைய பிள்ளை, ஐ. ஏ. எஸ்.

ஆணையர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,

சென்னை-34
5—3—1984

அன்புள்ள திரு. சீனிவாசன்,

தாங்கள் அனுப்பியிருந்த ''குமரமலை-தலவரலாறு பாமாலை'' என்னும் நூலின் பிரதிகள் கிடைக்கப்பெற்றன. குருபாததாசர் என்னும் கவிஞரால், ''குமரேச சதகம்'' பாடப்பெற்ற குமரமலையின் தலவரலாறும், அங்கு எழுந்தருளியுள்ள குமரப்பெருமான் மீது தாங்கள் பாடியுள்ள பாமாலையும், நல்லமுறையில் சிறப்பாக அமைந்திருக்கின்றன.

இந்நூலானது புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியாளர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ. ஆ. ப., அவர்களின் தலைமையில், தமிழ்நாடு போக்குவரத்துத் துறை ஆணையர் திரு. எஸ். டி. காசிராஜன், இ. ஆ. ப., அவர்களால் வெளி பெற்றமை அறிந்து, மிகவும் மகிழ்கின்றேன். தங்களுடைய தொண்டு பெரிதும் போற்றுதற்குரியது.

இங்ஙனமே, தாங்கள் மேலும் மேலும் பல நூல்களை இயற்றவும், தமிழுக்கும் சயமத்திற்கும் தொண்டு புரியவும், திருமுருகன் திருவருளைச் சிந்தித்து வந்திக்கிறேன்.

(ஒம்) கு. ஆளுடையபிள்ளை.

முருகா ஈரோடு

1—2—84

பேரன்புடையீர் !

வணக்கம். நலம்.

தாங்கள் வெளியிட்ட நூலும் கடிதமும் வந்தன. நூல் நன்கு அமைந்துள்ளது.

தங்களின் திருத்தொண்டு ஓங்குக.
முருகவேள் கருணை துணைபுரிக.

அன்பன்

ஒம்/-கிருபானந்தவாரி.

முருகன் துணை

24—1—84

கலைமகள் அலுவலகம்
87. எம். கே. அம்மன்
கோயில்தெரு,
அ. பெ. 604,
சென்னை - 600004

அன்புடையீர் !

வணக்கம். நலம்.

தாங்கள் அன்புடன் அனுப்பிய புத்தகம் கிடைத்தது இது நல்ல முயற்சி.

இறைவன் திருவருளால் கோயில் மேன்மேலும் ஓங்கி வளர்ந்து அன்பர்களுக்கு நல்லருளை வழங்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

அன்புள்ள,

(ஓம்) கி. வா. ஜகந்நாதன்.

**இரா. கற்பூரசுந்தரபாண்டியன்** ஐ. ஏ. எஸ்.
*மாவட்ட ஆட்சித் தலைவர்*, புதுக்கோட்டை.

ஆங்கில புத்தாண்டின் முதல் நாளான இன்று தமிழகத்தின் தலைசிறந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களில் ஒருவரான திரு எஸ். டி. காசிராஜன் ஐ.ஏ.எஸ். அவகர்ளைச் சந்திக்கக் கூடிய வாய்ப்பையும், பல்வேறு அரசு அலுவலர் களையும் ஒருங்கே சந்திக்கின்ற வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்த தெய்வீகப் பேரவையினருக்கு நான் முதலில் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக தலைமை மேலாளர் திரு. சீனிவாசன் அவர்கள் தனது ஓய்வு நேரத்தில் குமரன் பேரில் அரியதொரு பாமாலையையே எழுதி வெளியிடுவது குறித்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். எங்களது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் என்று நான் குறிப்பிட்டுச் சொல்வதற்கு காரணம், எனது முன்னவர் புதுக்கோட்டை மாவட்டத்தின் சிறப்புமிக்க ஆட்சித் தலைவராக இருந்த எனது இனிய நண்பர் திரு. எஸ். டி. காசிராஜன், ஐ.ஏ.எஸ். அவர்கள் காலத்தில் திரு. சீனிவாசன் அவர்கள் இப்பாமாலையை எழுதத் தொடங்கியிருந்த போதிலும், நான் மாவட்ட ஆட்சித் தலைவராக வந்தபின் இப்போதுதான், தன் பாமாலை எழுதி முடித்து அதை வெளியிடப்படுவது குறித்து பெருமைப்படுகிறேன்

திரு. சீனிவாசன் அவர்கள் இதுபோன்ற இன்னும் பல பாமாலைகளை எழுதி தமிழுக்கும், தெய்வீகத்திற்கும் சிறந்த தொண்டாற்ற வாழ்த்துகிறேன்.

இச் சந்தர்ப்பத்தில் எனது மனதில் தோன்றுகின்ற ஒரு முச்கியமான கருத்தைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். பிற சமயத்தைச் சார்ந்த மக்களைப் போன்று இந்து மதத்தினரிடையே ஒருங்கிணைந்த வழிபாட்டுமுறை இல்லை.

வழிபாட்டிற்கு வரும்போது மற்றவர்களைக் கண்டு அளவளாவும் பழக்கமும் இல்லை. கோவிலுக்குச் சென்றால் சிறிது நேரம் அங்கு உட்கார்ந்து இருந்துவிட்டு வரவேண்டும் என்ற வழக்கம் நம்மிடம் உண்டு. இதன் உள்நோக்கம் வழிபாடு முடிந்தபின் அங்கு வருபவர்களிடம் கூடி அளவளாவ வேண்டும் என்பதுதான். அந்தப் பழக்கம் மீண்டும் ஏற்பட வேண்டும். வழிபாட்டிற்கென ஒரு நாளில், அல்லது ஒரு வாரத்தில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அனைவரும் கூடி வழிபாடு செய்யும் முறையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

(1 - 1 - 1984 அன்று குமரமலை பாமாலை வெளியீட்டு விழாவில் நிகழ்த்திய தலைமை உரை)

**எஸ். டி. காசிராஜன். ஐ. ஏ. எஸ்.,**
போக்குவரத்து ஆணையர் மற்றும்
தலைவர், பச்சையப்பன் அறக்கட்டளை,
சென்னை 600 005.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவராக இருந்த நான், மாற்றலாகிச் சென்னைக்குச் செல்லும்போது, குமரேசசதகம் பாடிய குருபாததாசர் சொந்தவூர் புல்வயல் என்றும், அவரால் பாடல்பெற்ற குமரமலை இங்குதான் உள்ளது என்றும் அறிந்தேன். குமரமலையைக் காண ஒரு நாள் அங்கு சென்றேன். என்னுடன் வந்த திருவாளர் சா. சீனிவாசன், குமரமலை தண்டபாணி கோயில் பற்றிய வரலாற்றையும், சிறப்புகளையும் குமரேசசதகம் பற்றியும், குருபாததாசர் பற்றியும் எடுத்துச் சொன்னார். அப்போது உங்களுக்குத்தான் கவிபாடும் புலமை இருக்கிறதே, குமரமலை தண்டபாணியின் அருள் உள்ளதென்று கூறு கிறீரே நீர் ஏன் குமரமலை கோவில் வரலாறு எழுதக் கூடாது; பாமாலை பாடக்கூடாது என்று கூறினேன். அரசு அலுவலர்களுக்குரிய இயல்பான குணம், மாறுதலாகிவிட் டால் அவருக்கு இருக்கக்கூட இடம் தர மாட்டார்கள். ஆனால் திருவாளர். சீனிவாசன் அவர்கள் நான் மாறுதலாகிச் சென்றுவிட்டாலும், நான் கூறியதை மறக்காமல் குமரமலை வரலாறு பாமாலை எழுதி வெளியிட்டுள்ள அவரது உயர்ந்த குணத்தை, பண்பை நினைத்துப் பெருமைப்படுகிறேன்; உண்மையில் நான் புளகாங்கிதம் அடைகிறேன்.

திருவாளர். சீனிவாசன் ஒரு பித்து. யாருக்கு என்ன சிர மம் வந்தாலும் குமரமலை குமரேசனிடம் போ, எல்லாம் சரி யாகிவிடும் என்று கூறுவார். திருவாளர். முரு. மாணிக்கம் என்பவர் இனங்காணமுடியாத வயிற்றுவலியால் சிரமப் பட்டிருக்கிறார். திரு. சீனிவாசன் அவர்கள் அப்போது குமரமலை திருநீற்றைக் கொடுத்திருக்கிறார். வியாதி குண மாகிவிட்டது. அநேகர் இதைப் பெரும்பாலும் நம்பமாட்டார்

கள். ஆனால் மாணிக்கம் அவர்கள் நம்பி இருக்கிறார். உண்மையா, இல்லையா என்று இதோ இருக்கும் அவரிடம் கேட்டுப்பாருங்கள். அவர்தான் குமரமலை பாமாலை புத்தகம் வெளியிடுவதற்கான செலவில் பெரும் பகுதியை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

திருவாளர் சீனிவாசன் தான் எழுதியுள்ள நூலை எல்லோரும் படித்து முருகனருள் பெறவேண்டுமென்ற உயர்ந்த எண்ணத்தோடு இலவசமாக வெளியிட்டு இருக்கிறார். காப்பிரைட் கூட வைத்துக் கொள்ளாமல் வெளியிட அனுமதித்திருக்கிறார். இவ்வாறு தான் எழுதிய நூலை இலவசமாக காப்பிரைட் கூட இல்லாமல் வெளியிடுபவர்கள் பெரும்பாலும் தமிழகத்தில் இல்லை. அப்படிச் செய்யக்கூடியவர்கள் ஒருசிலர் கூட இல்லை. அநேகமாக ஒருவருமே இல்லை. பெரும்பாலும் இலவச வெளியீடு போட்டேன் என்பதற்காக 10, 20 பிரதிகளைப் போட்டு பெயர் பண்ணி விட்டு, பிறகு பணம் பண்ண ஆரம்பித்து விடுவார்கள். அப்படிப்பட்ட செயலை திருவாளர் சீனிவாசன் செய்யமாட்டார்; தெய்வீகப்பேரவை செய்யாது என்பது எனது நம்பிக்கை. அதற்காக எப்போதுமே அவர்களால் இலவசமாக வெளியிட்டு எல்லோருக்கும் கொடுத்துக்கொண்டிருக்க முடியாது. இப்போது 1200 பிரதிகள் போட்டிருக்கிறார்கள். பணம் படைத்தவர்கள், முருகனிடம் பக்தி உள்ளவர்கள் இன்னும் பலபிரதிகளை அச்சிட்டு வழங்கி, இந்நூலை தமிழ் நாடெங்கும் - இந்தியா முழுவதும் உலவிவரச் செய்ய வேண்டும். அப்போதுதான் பின்தங்கிய மாவட்டம் என்று நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கிற புதுக்கோட்டை மாவட்டத்தின் புகழ் ஓங்கும்; பரவும். திருவாளர். சீனிவாசன், நம்மிடம் இருப்பவர்தானே என்று சாதாரணமாக நினைத்து விடக்கூடாது. ''எந்தப்புற்றில் எந்தப் பாம்பு'' இருக்குமோ என்று நாம் சாதாரணமாகக் கூறுவதுபோல யாரிடம் என்ன சக்தி இருக்கிறதென்பது நமக்குத் தெரியாது. துரதிர்ஷ்டவசமாக அவர் ஒரு அரசு அதிகாரியாகப் போய்விட்டார். அவர் அரசு அதிகாரியாக இல்லாவிட்டால் இன்னும் பெருமையோடு வாழ்ந்திருக்க முடியும்; சிறப்போடு வாழ்ந்திருக்க முடியும்.

அவர் ஏதோ தனது திறமையினால் இந்நூலை எழுதி விட்டார் என்று நினைத்தால் அது தவறு. ஆண்டவனுடைய அருள் கொஞ்சமாவது இல்லாவிட்டால் இப்படி அற்புதமான பாமாலையை எழுதியிருக்க முடியாது. தொழுது தொழுது, அழுது அழுது, அதிகாலையிலிருந்து நாள் முழுவதும் தியான நிலையில் இருந்ததுபோல் இருந்து அவரது கவிதை களை எழுதியிருக்கிறார். "உருகாத உள்ளத்தை உருக வைக்கும் முருகா" இந்த ஒருவரி அட்சர லட்சம் பெறும் என்பது எனது சொந்தக் கருத்து. "முத்தமிழால் வைதாரை யும் வாழவைப்பான் முருகன்" என்பார்கள். திருவாளர் சீனிவாசன் முத்தமிழால் வைதிருந்தாலும் முருகன் அவ்ரை வாழவைப்பான். ஆனால் அவர் பாடலில் வேண்டாத, விரும் பத்தகாத சொல் ஒன்று கூட இல்லை. மிக எளிமையான தமிழில் இனிமையாகப் பாடியுள்ளார். சத்தம் போட்டுப் பாடி னால் அப்படியே அருள் வந்துவிடும்.

பாமாலையில் உள்ள 60 பாடல்களும் அற்புதமாக அமைந்துள்ளன. குருபாததாசர் பாடிய குமரேசசதகத்திற்கு தமிழகத்தில் எவ்வளவு பெருமையுண்டோ, அவ்வளவு பெருமை திருவாளர். சீனிவாசன் எழுதிய நூலுக்கு உண்டு. இப்பாமாலை தமிழ்நாடு முழுவதும் உள்ள மக்கள் அனை வரும் பாடி மகிழவேண்டிய அற்புதமான நூல். இப்பாடல் களை நாம் ஒவ்வொருநாளும் பாடி வந்தால் திருவாளர் சீனிவாசனுக்கு குமரனருள் எப்படிக் கிடைத்ததோ அப்படி குமரனுடைய அருள் நமக்கு நிச்சயம் கிடைக்கும். எனவே இப்பாமாலையை பாடிப் பயன்பெறுவது அனைவரது கடமை. திருவாளர். சீனிவாசன் அவர்களின் இப்பணி சிறக் கவும் மேலும் தமிழுக்கும் இறை பணிக்கும் சிறந்த தொண்டு செய்யவும் வாழ்த்துகிறேன்.

(1 - 1 - 1984 அன்று குமரமலை பாமாலை வெளியீட்டு விழாவில் நிகழ்த்திய நூல் வெளியீட்டு சிறப்புரை)

# திருப்புகழ் - ஆறு படை வீடு

## குன்றுதோராடல்

அதிரும் கழல்பணிந்து னதடியேனுன்
அபயம் புகுவ தென்று நிலைகாண,

இதயந் தனிலிருந்து க்ருபையாகி
இடர் சங் கைகள் கலங்க அருள்வாயே!

எதிரங் கொருவ ரின்றி நடமாடும்
இறைவன் தனது பங்கி லுமைபாலா!

பதி யெங்கிலுமிருந்து விளையாடிப்
பலகுன் றிலுமமர்ந்த பெருமாளே!

[அருணகிரிநாதர்]

## திருநீற்றின் பெருமை

ஆண்டியப்பன் சன்னதிக்கு அடியார்கள் திருக்கூட்டம்
வேண்டியதைக் கோரிவந்தால் விரைவிலதைக்
கொடுத்திடுவான்!

பூண்டொளிரும் திருநீறே பூசைக்கு முதற்பொருளாம்
தீண்டியவர் பாவங்கள் தீர்க்கின்ற திருமருந்தாம்!

கவிஞர் சா. சீனிவாசன்

## குமரமலை தலவரலாறு பாமாலை

### முருக பக்தர்களுக்கு மகிழ்வு தரும் நூல் !

புதுக்கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டை நகரிலிருந்து 12 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள குமரமலையில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீ தண்டபாணி மீது அளவுகடந்த பக்தியினால் ஆசிரியர் சா. சீனிவாசன் இந்நூலில் 60 பாக்களை ''குமரமலை குமரேசன் பாமாலை'' யாகத் தொகுத்து தண்டபாணிக்குக் காணிக்கையாக்கி யுள்ளார். தண்டபாணி திருக்கோயில் வரலாறு இந்நூலில் இடம் பெற்றுள்ளது. முருக பக்தர் களுக்கு மகிழ்வு தரும் நூல்.

நன்றி: தினமணி,
13-2-1984.